**அல்லாஹ்வின் கட்டளை**

رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً
وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً
وَّقِنَا عَذَابَ النَّارِ

எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக.

(அதிகாரம் அல் பக்கரா : 202)


بسم الله الرحمن الرحیم　　نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 28

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

27 ஷவ்வால் 1439 ஹிஜ்ரி கமரி　12 வஃபா 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

12 ஜுலை 2018


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வொரு அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**எவர் பொய்யையும், ஏமாற்றுதலையும் விட்டு விடவில்லையோ அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். எவர் மறுமையின் பக்கம் சிறிதும் கவனம் செலுத்தாமல் உலகப் பேராசையில் மூழ்கி இருப்பாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவராக மாட்டார். எவர் உண்மையாக உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்க மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தை சார்ந்தவராக மாட்டார். எவர் முழுமையாக ஒவ்வொரு தீமையையும், தீய செயலையும் அதாவது மது அருந்ததுதல், சூதாட்டம், தீய பார்வை, நம்பிக்கை துரோகம், லஞ்சம் வாங்குதல் முதலிய கூடாத செயல்களிலிருந்து விலகி இறைவனிடம் பாவமன்னிப்பு கோர மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்ல. எவர் ஐந்து நேரத் தொழுகைகளையும் கடைப்பிடிக்க மாட்டாரோ அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். எவர் பிரார்த்தனையில் தொடர்ந்து ஈடுபடாமலும், பணிவுடன் இறைவனை நினைவு கூறாமலும் இருக்கின்றாரோ அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர்.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

இந்த எல்லா விஷயங்களுக்குப் பின் மீண்டும் நான் தெரிவித்துக் கொள்வது என்னவெனில், நாம் வெளிப்படையாக பைஅத் என்னும் உடன்படிக்கை செய்து விட்டோம் என்று நீங்கள் நினைக்காதீர்கள். வெறும் வெளிப்படையான செயல் பொருள் அற்றதாகும். இறைவன் உங்களது உள்ளங்களையே பார்க்கின்றான். அதன்படியே உங்களோடு அவன் நடந்து கொள்வான். பாருங்கள்.நான் இதனைக் கூறிவிட்டு தப்லீக் எனப்படும் பிரச்சாரத்தின் கடமைகளிலிருந்து சற்று ஓய்வு பெறுகிறேன்.

அதாவது, பாவம் ஒரு விஷமாகும். அதனை நீங்கள் அருந்தாதீர்கள். இறைவனுக்கு கீழ்ப்படியாமை ஒரு தீய மரணமாகும். இதிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு சக்தி கிடைப்பதற்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்து வாருங்கள். எவர் துஆச் செய்யும் சமயத்தில் இறைவன் வாக்குறுதியின் மூலம் முன்பே விதிவிலக்காக்கப்பட்டதைத் தவிர ஒவ்வொரு விஷயத்திற்கும் சக்தியுள்ளவன் என அவனை நம்ப மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்லர்.

எவர் பொய்யையும், ஏமாற்றுதலையும் விட்டு விடவில்லையோ அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். எவர் மறுமையின் பக்கம் சிறிதும் கவனம் செலுத்தாமல் உலகப் பேராசையில் மூழ்கி இருப்பாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவராக மாட்டார். எவர் உண்மையாக உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்க மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தை சார்ந்தவராக மாட்டார். எவர் முழுமையாக ஒவ்வொரு தீமையையும், தீய செயலையும் அதாவது மது அருந்ததுதல், சூதாட்டம், தீய பார்வை, நம்பிக்கை துரோகம், லஞ்சம் வாங்குதல் முதலிய கூடாத செயல்களிலிருந்து விலகி இறைவனிடம் பாவமன்னிப்பு கோர மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்ல. எவர் ஐந்து நேரத் தொழுகைகளையும் கடைப்பிடிக்க மாட்டாரோ அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். எவர் பிரார்த்தனையில் தொடர்ந்து ஈடுபடாமலும், பணிவுடன் இறைவனை நினைவு கூறாமலும் இருக்கின்றாரோ அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். எவர் தன்மீது தீய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கெட்ட நண்பர்களோடுள்ள தொடர்பை விட்டொழிக்க

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களான ஹஸ்ரத் உக்காஷா பின் மஹ்ஸன், ஹஸ்ரத் ஹார்ஜா பின் ஸைது, ஹஸ்ரத் ஸியாத் பின் வலீத், ஹஸ்ரத் முஅத்திப் பின் உபைது, ஹஸ்ரத் காலித் பின் பகீர் ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் ஆகியவர்களைப் பற்றி நற்குறிப்பு**

**மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டே பேரன்பு, கலப்பற்ற தன்னை மற்றும் பார்க்கத் தொண்டு மேலும் வியக்கத்தக்க தியாகங்கள் தொடர்பான சம்பவங்கள் பற்றி நற்குறிப்பு**

**ஹுஸூர் அவர்கள் உகன்டா நாட்டைச் சேர்ந்த முபல்லிக் மதிப்பிற்குரிய இஸ்மாயீல் மாலா காலா சாஹிப் அவர்களது வஃபாத் பற்றிய அறிவிப்பை செய்தவாறு அன்னாரது நற்குறிப்பையும் எடுத்துக் கூறினார்கள். மேலும் அன்னாரது ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்.**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** **1 ஜுன் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **1 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ رَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ-
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் உக்காஷா பின் மஹ்ஸன் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒரு சஹாபி ஆவார்கள். பெரிய சஹாபாக்களில் ஒருவராக ஹஸ்ரத் உக்காஷா பின் மஹ்ஸன் (ரலி) அவர்கள் விளங்கினார்கள். அன்னார் பத்ர் போரின் போது குதிரையில் சவாரி செய்து கலந்து கொண்டார்கள். அன்றைய தினம் அவர்களது வாள் உடைந்து விட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு ஓர் கம்பை கொடுத்தார்கள். அக்கம்பானது அன்னாரின் கரங்களில் மிகவும் கூர்மையான வாள் போன்று ஆனது. மேலும் அவர்களைக் கொண்டே அன்னார் அல்லாஹ் வெற்றி தரும் வரை போர் செய்தார்கள்.

மேலும் இதே கம்பைக் கொண்டு அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பல போர்களில் கலந்து கொண்டுள்ளார்கள். இந்த கம்பால் ஆன வாள் அன்னார் வஃபாத் ஆகும் வரை அன்னாரிடம் இருந்தது. அந்த வாளின் பெயர் ஒன் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரிடம், நீங்கள் எவ்வித கேள்வி கணக்குமின்றி சுவர்க்கத்தில் நுழைவீர்கள் என்ற நற்செய்தி வழங்கியிருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 64,65, உக்காஷா பின் மஹ்ஸன், 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதர் போரின் போது சஹாபாக்களிடம், அரபு நாட்டின் மிகச் சிறந்த வீரர் நம்முடன் இருக்கின்றார் என்று கூறினார்கள். அதற்கு சஹாபாக்கள், அல்லாஹ்வின் தூதரே! அந்த நபர் யார்? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானர் (ஸல்) அவர்கள், உக்காஷா பின் மஹ்ஸன் என்று பதிலளித்தார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம், பக்கம் 435 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன். அன்னார் கூறினார்கள்:

எனது சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு கூட்டம் சுவர்க்கத்தில் நுழையும். அவர்களின் எண்ணிக்கை 70,000 ஆகும். மேலும் அவர்களது முகங்கள் 14 வது இரவின் சந்திரனைப் போன்று பிரகாசமாக இருக்கும்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உக்காஷா பின் நேசம் அவர்கள் தமது விரிப்பை எடுத்துக் கொண்டு எழுந்து நின்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! என்னையும் அவர்களில் ஒருவராக ஆக்குவதற்கு நீங்கள் அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வே! இவரையும் அவர்களில் ஒருவராக ஆக்குவாயாக என்று துஆ செய்தார்கள்.

அடுத்து அன்ஸார்களில் ஒருவர் எழுந்து நின்றார். அவர் ஹஸ்ரத் நபிகள் நர்யகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! என்னையும் அவர்களில் ஒருவராக ஆக்குவதற்கு நீங்கள் அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நர்யகம் (ஸல்) அவர்கள், سَبَقَكَ بِهَا عُكَّاشَة அதாவது உகாஷா இவ்விஷயத்தில் உம்மை விட முன்னேறிச் சென்று விட்டார்கள் என்று கூறினார்கள். (சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான், ஹதீஸ் எண் 369)

இந்த சம்பவத்தைப் பற்றி சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதியுள்ளார்கள். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது சமுதாயத்தைச் சேர்ந்த 70,000 பேர் எவ்வித கேள்வி கணக்குமுன்றி சுவர்க்கதில் நுழைவார்கள் என்று தமது சபையில் கூறினார்கள்.

அதாவது அவர்கள் ஆன்மீக படித்தரத்தில் உயர் தகுதியை அடைந்திருப்பார்கள். அவர்களுக்காக இறைவனது அருள் எந்த அளவு பொங்கி எழும் என்றால் அவர்களிடம் எவ்வித கேள்விகளும் கேட்பதற்கான அவசியம் இருக்காது.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நர்யகம் (ஸல்) அவர்கள் இதனையும் கூறினார்கள். அதாவது அவர்களின் முகங்கள் 14 வது இரவின் சந்திரன் வானத்தில் பிரகாசமாக இருப்பதைப் போன்று கியாமத் நாளன்று பிரகாசமாக இருக்கும். இதனைக் கூறிய பிறகு உக்காஷா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நர்யகம் (ஸல்) அவர்களிடம், அவர்களில் என்னையும் ஒருவராக அல்லாஹ் ஆக்குவதற்கு துஆ செய்யுங்கள் என்று கேட்டதற்கிணங்க ஹஸ்ரத் நபிகள் நர்யகம் (ஸல்) அவர்கள், உக்காஷாவையும் அவர்களில் ஒருவராக ஆக்குவாயாக என்று துஆ செய்தார்கள்.

இது தொடர்பான விரிவான விளக்கத்தை அவர்கள் அழகிய வடிவில் இந்நூலில் எழுதியுள்ளார்கள். இது தொடர்பாக அன்னார் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சபை வெளிப்படையில் சாதாரணமானதாக இருந்தாலும் இந்த சிறிய சம்பவமானது தன்னகத்தே மிகப்பெரிய ஞானங்களின் கருவூலங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. ஏனெனில் இந்த சம்பவத்திலிருந்து முதலில் தெரிய வருவது என்னவென்றால்,

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆன்மீக அருள் எத்தகு உயர் தகுதியை அடைந்திருக்கின்றது என்றால் அவர்களது ஆன்மீக அந்தஸ்தின் விளைவாக அல்லாஹ்வின் மாபெரும் அருளால் அன்னாரது உம்மத்தைச் சார்ந்த 70,000 பேர் கியாமத் நாளன்று எல்லாவிதமான கேள்வி கணக்குகளுக்கும் அப்பாற்பட்டவர்களாக கருதப்படுவர். 70,000 என்பதற்கு ஒரு மிகப்பெரிய கூட்டம் என்ற பொருளும் கொடுக்கப்படுகின்றது.

இரண்டாவதாக இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அல்லாஹ்வின் சன்னிதானத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எத்தகைய நெருக்கம் இருக்கின்றது என்றால் அன்னாரது ஆன்மீக கவனத்தின் விளைவாக அல்லாஹ் கனவின் மூலமாகவோ அல்லது ஆன்மீகக் காட்சியின் விளைவாகவோ உடனடியாக அன்னாருக்கு

உக்காஷாவைப் பற்றிய செய்தியையும் தெரிவித்து விட்டான்.

உக்காஷா முதலில் சுவர்க்கம் செல்லக்கூடிய அந்த கூட்டத்தில் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அன்னாரது துஆவின் விளைவாக அல்லாஹ் அந்த கூட்டத்தினரோடு அவர்களையும் சேர்த்துக் கொண்டான்.

இந்த சம்பவத்திலிருந்து மூன்றாவதாக தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு இறைவனுடன் மரியாதையுடன் நடந்து கொண்டார்கள்; மேலும் இந்த தரத்தை தனது உம்மத்தில் எந்த அளவுக்கு உயர்த்த நினைத்தார்கள் என்றால் ஹஸ்ரத் உக்காஷா அவர்களுக்குப் பிறகு இவ்வாறான ஒரு துஆவை தமக்காகவும் செய்யுமாறு ஒருவர் கேட்டதற்கு அன்னார், எந்த ஆன்மீக தரத்தை இந்த தூய கூட்டம் அடைய இருந்ததோ அந்த ஆன்மீக தரத்தை அடைவதற்காக வேண்டி தனிப்பட்ட முறையில் தனி நபருக்காக துஆ செய்யவதை மறுத்து விட்டார்கள்.

முஸ்லிம்களுக்கு இறையச்சம், ஈமான் மற்றும் நற்செயல்களில் முன்னேற்றம் அடைவதன் பக்கம் கவனமூட்டினார்கள். மேலும் இவ்விஷயத்தின் பக்கம் உங்களுக்கு கவனம் இருக்குமென்றால் இந்த அந்தஸ்தை நீங்கள் அடையலாம் என்றும் கவனமூட்டினார்கள்.

நான்காவதாக இந்த சம்பவத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் நல்லொழுக்கமும் நமக்கு வெட்ட வெளிச்சமாக தெரிய வருகின்றது. ஏனென்றால் பெருமானார் (ஸல்) அவர்கள், கேள்வி கேட்ட அன்ஸாரியின் உள்ளம் துக்கமடையும் வகையில் மறுப்பு கூறவில்லை. மாறாக, மிகவும் நுட்பமான முறையில் இந்த விஷயத்தை கையாண்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் **667,668**)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உக்காஷா (ரலி) அவர்களை பல்வேறு போர்களில் படைகளுக்கக அமீராக நியமித்து அனுப்பியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தின் ஆறாவது ஆண்டின் ரபீவுல் அவ்வல் மாதத்தில் உக்காஷா (ரலி) அவர்களை **40** முஸ்லிம்களைக் கொண்ட ஒரு குழுவிற்கு தலைவராக நியமித்து பனி அஸத் கோத்திரத்தாருடன் போரிடுவதற்காக அனுப்பி வைத்தார்கள். இந்த கோத்திரம் ஒரு நீருற்றின் பக்கம் தமது கூடாரத்தை அமைத்திருந்தது. அதன் பெயர் கமர் ஆகும்.

மேலும் அது மதீனாவிலிருந்து மக்காவிற்கு சில நாட்கள் பயணம் செய்யும் தொலைவில் இருந்தது. உக்காஷா குழு வெகுவிரைவாக பயணம் செய்து அவர்களுடைய சூழ்ச்சியை தடுக்க வேண்டும் என்பதற்காக அவ்விடத்தை அடைந்தது. ஆனால் முஸ்லிம்கள் வருவதனை அறிந்த அந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் இங்கும் அங்கும் பிரிந்து சென்று விட்டனர். இதன் விளைவாக உக்காஷா மற்றும் அவர்களுடன் வந்தவர்களுக்கு மதீனாவிற்கு திரும்ப வேண்டியதாயிற்று. இவ்வாறு எவ்வித போரும் நடக்கவில்லை. அவர்களுடன் போர் செய்வதற்கான எந்த முயற்சியும் இவர்கள் செய்யவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் **666**)

அதாவது முஸ்லிம்களுக்கு போர் செய்வதற்கு மிகவும் ஆர்வம் இருந்தது என்று ஆதாரமற்ற ஆட்சேபனைகளை இவர்கள் செய்கின்றனர் என்று கூறுகின்றனர்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சூரா நஸ்ர் அருளப்பட்ட போது ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை பாங்கு கொடுக்குமாறு அன்னார் கட்டளையிட்டார்கள். தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குத்பா கொடுத்தார்கள். அதைக் கேட்டு மக்கள் மிகவும் அழுதார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மக்களே! நான் எத்தகைய நபியாவேன் என்று வினவினார்கள். அதற்கு அம்மக்கள், அல்லாஹ் உங்களுக்கு நற்கூலியை வழங்குவானாக. நீங்கள் எல்லாரையும்விட மிகச்சிறந்த நபியாவீர்கள். நீங்கள் எங்களுக்கு கருணைகாட்டக்கூடிய தந்தை மற்றும் பரிவுடன் அறிவுரை வழங்கக்கூடிய சகோதரரை போன்றவர் ஆவீர்கள்.

நீங்கள் எங்களுக்கு அல்லாஹ்வின் தூதையும், அவனது இறையறிவிப்பையும் கொண்டு சேர்த்துள்ளீர்கள். மேலும் ஹிக்மத் மற்றும் நல்ல போதனைகளின் மூலமாக எங்களை அல்லாஹ்வின் வழியின் பால் அழைத்தீர்கள். அல்லாஹ் தனது நபிமார்களுக்கு வழங்குகின்ற சிறந்த நற்கூலியை தங்களுக்கு வழங்குவானாக என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஸ்லிம் சமுதாயமே! அல்லாஹ் மற்றும் உங்கள் மீது எனக்கு இருக்கின்ற உரிமைகள் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன். அதாவது என் தரப்பிலிருந்து எவர் மீதாவது ஏதாவது அநீதி இழைக்கப்பட்டிருந்தால், அவர் எழுந்து நிற்கட்டும். அவர் அதற்காக என்னை பழிவாங்கிக் கொள்ளட்டும் என்று கூறினார்கள். ஆனால் எவரும் எழுந்து நிற்கவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டாவது முறையும், அல்லாஹ் மற்றும் உங்கள் மீது எனக்கு இருக்கின்ற உரிமைகள் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன். அதாவது என் தரப்பிலிருந்து எவர் மீதாவது ஏதாவது அநீதி இழைக்கப்பட்டிருந்தால், அவர் எழுந்து நிற்கட்டும். அவர் அதற்காக என்னை பழிவாங்கிக் கொள்ளட்டும். மேலும் கியாமத் நாளன்று பழிவாங்குவதற்கு பகரமாக இப்போதே பழிவாங்கிக் கொள்ளட்டும் என்று கூறினார்கள்.

அப்போது மக்களிலிருந்து ஒரு முதியவர் எழுந்து நின்றார். அவர் பெயர் உக்காஷா ஆகும். அவர்கள் முஸ்லிம்கள் மத்தியிலிருந்து முன்னே வந்தார். எதுவரையென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகிலே வந்து நின்றார். மேலும் அவர், அல்லாஹ்வின் தூதரே (ஸல்)! உங்கள் மீது என் தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டுமாக. நீங்கள் மீண்டும் மீண்டும் சத்தியம் செய்யாமல் இருந்திருந்தால் நான் ஒருபோதும் எழுந்திருக்க மாட்டேன் என்று கூறினார்கள்.

மேலும், நபிகள் நாயகமே (ஸல்)! நான் உங்களுடன் ஒரு போரில் உடனிருந்தேன். போரிலிருந்து திரும்பிய போது எனது ஒட்டகம் உங்களது ஒட்டகத்திற்கு அருகில் வந்தது. அப்போது நான் எனது சவாரியிலிருந்து கீழே இறங்கி உங்களது கால்களில் முத்தம் கொடுப்பதற்காக உங்கள் அருகில் வந்தேன். ஆனால் நீங்கள் உங்களது கைத்தடியை அடித்தீர்கள். அது என்மீது பட்டது. ஆனால் நீங்கள் அந்த கைத்தடியினால் ஒட்டகத்தை அடித்தீர்களா? அல்லது என்னை அடித்தீர்களா? என்பது எனக்குத் தெரியாது என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் கண்ணியத்தின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் ரஸூல் வேண்டுமென்றே உன்னை அடிக்கவில்லை என்று கூறினார்கள்.

மேலும், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைப் பார்த்து, பிலாலே! ஃபாத்திமாவிடம் செல்வீராக. ஹஸ்ரத் ஃபாத்திமாவின் வீட்டிலுள்ள அந்த கைத்தடியை வாங்கிக் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் சென்றார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம், நபிகள் நாயகத்தின் மகளே! எனக்கு அந்த கைத்தடியை கொடுங்கள். அதற்கு ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள், பிலாலே! எனது தந்தை இத்தடியை என்ன செய்யப் போகின்றார்கள்? இது போரின் நாளல்ல; மறாாக, ஹஜ்ஜின் நாளால்லவா? என்று கேட்டார்கள். அதற்கு பிலால் (ரலி) அவர்கள், ஃபாத்திமாவே! நீங்கள் உங்களது தந்தையைப் பற்றி அறியாதவராக இருக்கின்றீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை விட்டு பிரிந்து செல்ல இருக்கின்றார்கள். மேலும் இந்த உலகை விட்டே செல்ல இருக்கின்றார்கள். மேலும் தம்மை பழிவாங்க விரும்புபவர்களை அழைக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் வியப்புடன், பிலாலே! எவருடைய உள்ளம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பழிவாங்க வேண்டும் என்று விரும்பும்? என்று வினவினார்கள்.

மேலும், பிலாலே! ஹஸன் மற்றும் ஹுஸைன் ஆகிய இருவரிடமும் அந்த மனிதருக்கு முன்னால் நிற்குமாறு கூறுங்கள். மேலும் அந்த மனிதர் இவ்விருவரையும் பழிவாங்கிக் கொள்ளட்டும். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பழிவாங்க வேண்டாம் என்று கூறினார்கள்.

பிலால் (ரலி) அவர்கள் பள்ளிக்கு வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கைத்தடியை கொடுத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த கைத்தடியை உக்காஷா அவர்களுக்கு கொடுத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் நடந்து கொண்டிருப்பதை பார்த்து அவர்கள் இருவரும் எழுந்து நின்றார்கள்.

மேலும், உக்காஷாவே! நாங்கள் உங்கள் முன்னால் நிற்கின்றோம். நீங்கள் எங்களை பழிவாங்கிக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதுவும் கூறாதீர்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்விருவரிடமும், அபூபக்ர் மற்றும் உமர் அவர்களே! நில்லுங்கள். அல்லாஹ் உங்கள் இருவரது தகுதியையும் நன்கறிவான் என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும், உக்காஷாவே! நான் எனது முழு வாழ்நாளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனே கழித்தேன். நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பழிவாங்குதை எனது உள்ளம் ஏற்றுக் கொள்ளாது. இது எனது உடலாகும். என்னை நீங்கள் பழிவாங்குங்கள். என்னை நீங்கள் நூறு முறை அடித்தாலும் பரவாயில்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பழிவாங்காதீர்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அலியே! உட்காருங்கள். அல்லாஹ் உங்களது எண்ணங்களையும், தகுதியையும் நன்கறிவான் என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் ஹஸன் மற்றும் ஹுஸைன் ஆகியோர் எழுந்து நின்றனர். அவர்கள் உக்காஷாவிடம், உக்காஷாவே! நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரக் குழந்தைகள் ஆவோம். நீங்கள் எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பழிவாங்க வேண்டும் என்று நினைக்கின்றீர்களோ அவ்வாறே எங்களை பழிவாங்குங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்விருவரிடமும், எனது அன்பிற்குரியவர்களே! உட்காருங்கள் என்று கூறிவிட்டு, உக்காஷாவே அடியுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உக்காஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நபிகள் நாயகமே(ஸல்)! நீங்கள் என்னை அடித்த போது எனது வயிற்றில் ஆடையில்லாமல் இருந்தது என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமது வயிற்றிலிருந்த ஆடையை விலக்கிக் கொண்டார்கள். அப்போது முஸ்லிம்கள் அழுதார்கள். உண்மையிலேயே உக்காஷா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடிப்பாரா? என்று கூறினர்.

ஆனால் ஹஸ்ரத் உக்காஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடலின் வெண்மையை பார்த்ததும் அன்னாரை கட்டித் தழுவி அன்னாரது உடலை முத்தமிட ஆரம்பித்தார்கள்.

மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகமே (ஸல்)! எவரது உள்ளம் உங்களை பழிவாங்க விரும்பும்? என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பழிவாங்க வேண்டுமா? அல்லது மன்னிக்கின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு உக்காஷா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் ரஸூலே! அல்லாஹ் மறுமை நாளன்று என்னை மன்னிப்பான் என்ற நம்பிக்கையில் மன்னித்து விட்டேன் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களைப் பார்த்து, எவர் சுவர்க்கத்தில் என்னுடன் இருப்பவரை பார்க்க விரும்புகின்றாரோ அவர் இந்த முதியவரை பார்க்கட்டும் என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு முஸ்லிம்கள் எழுந்து உக்காஷாவின் நெற்றியில் முத்தமிட்டனர். மேலும் அவரிடம், நீங்கள் மிக உயரிய தகுதியையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அருகாமையையும் பெற்று விட்டீர் என்று அன்னாருக்கு வாழ்த்துக்களை கூறினர்.

(மஜ்மவு ஸ்ஸவாயித் தொகுதி 8 பக்கம் 429–431, அலாமாதுன் நவுப்பத் என்ற நூல் ஹதீஸ் எண் 14253 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இவர்கள் தான் ஹஸ்ரத் உக்காஷா (ரலி) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் திரும்பிச் செல்வது தொடர்பான செய்தியை கூறிக்கொண்டிருக்கின்றார்கள். இதற்குப் பிறகு அன்னாரது உடலில் முத்தம் கொடுப்பதற்கான வாய்ப்பு கிடைக்குமா? கிடைக்காதா? என்று தெரியாது என்று எண்ணியவாறு இந்த சந்தர்ப்பத்திலிருந்து அன்னார் பயனடைந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் உக்காஷா (ரலி) அவர்கள் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்றவர்களுடன் போரிடுவதற்காக சென்றார்கள்.

ஈஸா பின் அலீலா தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மக்களுடன் போர் செய்யும் போது பாங்கு ஓசை கேட்டு விட்டால் தாக்குதல் தொடுக்க மாட்டார்கள். பாங்கு ஓசை கேட்கவில்லை என்றால் தாக்குதல் நடத்துவார்கள். அன்னார் பஸாஹா என்ற இடத்திலிருந்த ஒரு சமுதாயத்தை சென்றடைந்தது ஹஸ்ரத் உக்காஷா பின் முஹ்ஸின் மற்றும் ஹஸ்ரத் சாபித் பின் அக்ரம் ஆகிய இருவரையும் எதிரிகளைப் பற்றிய செய்தியை அறிந்து வருவதற்காக அனுப்பினார்கள்.

அவ்விருவரும் குதிரையில் சென்றார்கள். ஹஸ்ரத் உக்காஷா அவர்களின் குதிரையின் பெயர் அர்ரஸாம் ஆகும். ஹஸ்ரத் சாபித் அவர்களின் குதிரையின் பெயர் அல்முஹர் ஆகும். இவ்விருவரும் முஸ்லிம்களைப் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்வதற்காக தமது படைகளுக்கு முன்னால் வந்து கொண்டிருந்த தல்ஹா மற்றும் அவருடைய சகோதரரான சல்மா ஆகியோருடன் சண்டையிட நேர்ந்தது. தல்ஹா ஹஸ்ரத் உக்காஷாவுடனும், சல்மா ஹஸ்ரத் சாபித்துடனும் சண்டையிட்டனர். இந்த இரு சகோதரர்களும் இந்த இரண்டு சஹாபாக்களையும் ஷஹீதாக்கினார்கள்.

அபூ வாகது லைஸி கூறுகின்றார்கள். நாங்கள் இருநூறு பேரைக் கொண்ட அந்த படை வீரர்களுக்கு முன்னால் நாங்கள் செல்ல இருந்தோன். ஆனால் ஷஹீதாக்கப்பட்ட ஹஸ்ரத் சாபித் மற்றும் ஹஸ்ரத் உக்காஷா ஆகியோரின் அருகில் நின்று விட்டோம். எதுவரை என்றால் ஹஸ்ரத் காலித் அவர்களும் வந்தடைந்தார்கள். மேலும் அவர்களது கட்டளையினால் நாங்கள் ஹஸ்ரத் சாபித் மற்றும் ஹஸ்ரத் உக்காஷா ஆகிய இருவரையும் இரத்தம் படிந்த ஆடையிலேயே நல்லடக்கம் செய்து விட்டோம்.

இந்த சம்பவம் ஹிஜ்ரத்தின் 12 வது ஆண்டில் நடைபெற்றது. இவ்வாறு அவர்களது ஷஹாதத் நிகழ்ந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 245, சாபித் பின் அக்ரம் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹயா அத்தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஸைது அவர்களின் மகனான ஹஸ்ரத் கார்ஜா அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒரு சஹாபி ஆவார்கள். ஹஸ்ரஜ் கோத்திரத்தின் அஃஸர் குடும்பத்தை சார்ந்தவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் கார்ஜா அவர்களின் மகளான ஹஸ்ரத் ஹபீபா அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மனைவியாவார்கள். அவர்கள் மூலமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் என்ற மகள் பிறந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸைது அவர்களின் மகனான கார்ஜா அவர்களுக்கும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குமிடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள். அவர்கள் ரயீஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். மேலும் அவர்கள் மூத்த சஹாபாக்களில்

ஒருவராக விளங்கினார்கள். அவர்கள் உக்பாவில் பைஅத் செய்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 271, சாபித் பின் அக்ரம் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹயா அத்தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸைதின் மகனான கார்ஜா அவர்களின் வீட்டில் தங்கினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 640 ஹார்ஜா பின் ஸைது – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இவர்கள் பதர் போரில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் கார்ஜா (ரலி) அவர்கள் பத்ர் போரில் மிகவும் தைரியமாகவும், வீரத்துடனும் போரிட்டாவறு ஷஹாதத் அந்தஸ்தை பெற்றார்கள். அம்புகள் அவர்கள் மீது பாய்ந்தன. இது தவிர அவர்கள் மீது மேலும் 13 காயங்கள் இருந்தன. அவர்கள் பலத்த காயத்துடன் இருந்த போது ஸுஃப்வான் பின் உமய்யா அவர்களை கடந்து சென்றான். அவன் அவர்களை அடையாளங்கண்டு கொண்டதனால் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை ஷஹீதாக்கினான். மேலும் அவர்களது உடலையும் சிதைத்து விட்டான்.

மேலும் அவன், இவர்கள் யாரென்றால் பதர் போரின் போது அபூ அலாவை கொலை செய்தவர்கள் அதாவது எனது தந்தையான உமய்யா பின் ஹலஃபை கொன்றவர்கள். இப்போது எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களில் சிறந்த மனிதர்களை கொலை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இவர்களை கொன்று எனது உள்ளத்தை நான் குளிர்விப்பேன் என்று கூறினான்.

மேலும் அவன், ஹஸ்ரத் இப்னு கவ்கல், ஸைது அவர்களின் மகனான ஹஸ்ரத் கார்ஜா மற்றும் அர்கம் அவர்களின் மகனான ஒஸ் அவர்களை ஷஹீதாக்கினான்.

ஹஸ்ரத் கார்ஜா மற்றும் ஸஅது பின் ரபீஃ ஆகிய இருவரும் அன்னாரது சகோதரரின் மகனாவார்கள். இந்த இருவரும் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 3–4, ஹார்ஜா பின் ஸைது (ரலி) – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அறிவிப்பில் வருகின்றது. அஹது போர் நடந்த நாளில் ஹஸ்ரத் அப்பாஸ் பின் உபாதா அவர்கள் மிகவும் உரத்த குரலில், முஸ்லிம்களே! அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுடன் இணைந்திருங்கள். உங்களுக்கு வந்த துன்பமானது தனது நபிக்கு கட்டுப்படாதமையால் வந்ததாகும். அவன் உங்களுக்கு உதவிக்கான வாக்குறுதிகளை வழங்கினான். ஆனால் நீங்கள் பொறுமையை கையாளவில்லை என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் அப்பாஸ் பின் உபாதா அவர்கள், தமது கவச ஆடையை கழற்றினார்கள். மேலும் ஸைது அவர்களின் மகனான ஹஸ்ரத் கார்ஜாவிடம், உங்களுக்கு இதன் தேவை இருக்கின்றா? என்று கேட்டார்கள். அதற்கு கார்ஜா அவர்கள், இல்லை. எதை நீங்கள் விரும்புகின்றீர்களோ அதையே நானும் விரும்புகின்றேன் என்று கூறினார்கள். பிறகு இவர்கள் அனைவரும் எதிரிகளுடன் வலுவாக போரிட்டார்கள்.

அப்பாஸ் பின் உபாதா அவர்கள், அதாவது நாம் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதாவது துன்பம் நேர்ந்தால் நம்மால் அல்லாஹ்விடம் என்ன சாக்குப்போக்கை கூற முடியும்? என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் கார்ஜா அவர்கள், நமது இறைவனுக்கு முன்னிலையில் நம்மிடம் எந்த சாக்குப்போக்கோ அல்லது ஆதாரமோ இருக்காது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் பின் உபாதா (ரலி) அவர்களை சுஃப்யான் பின் அப்து ஷம்ஸ் சலமி என்பவன் ஷஹீதாக்கினான். மேலும் ஸைது அவர்களின் மகனான ஹஸ்ரத் கார்ஜா (ரலி) அவர்களது உடலில் பத்திற்கும் மேற்பட்ட காயங்கள் ஏற்பட்டது.

(கிதாபுல் மகாஸி தொகுதி 1 பக்கம் 227,228, பாப் கஸ்வா அஹது, 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

உஹது போரில் ஹஸ்ரத் மாலிக் பின் வஹ்ஷம் அவர்கள் ஹஸ்ரத் கார்ஜா பின் ஸைது அவர்களை கடந்து சென்றார்கள். ஹஸ்ரத் கார்ஜா அவர்கள் கடுமையான காயத்துடன் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு ஏறக்குறைய 13 ற்கும் மேற்பட்ட காயங்கள் ஏற்பட்டிருந்தன. ஹஸ்ரத் மாலிக் அவர்கள் ஹஸ்ரத் கார்ஜா அவர்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார்கள்.

அதற்கு கார்ஜா அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள் என்றால் அல்லாஹ் உயிருடன் தானே இருக்கின்றான். அவன் மரணிப்பதில்லை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூதை எட்ட வைத்து விட்டார்கள். நீங்களும் உங்களது மார்க்கத்திற்காக போரிடுங்கள் என்று கூறினார்கள்.

(கிதாபுல் மகாஸி தொகுதி 1 பக்கம் 243, பாப் கஸ்வா அஹது, 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவிச் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கார்ஜா அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தனர். அவர்களில் ஒருவர் ஸைது பின் கார்ஜா ஆவார். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள். ஹஸ்ரத் கார்ஜா பின் ஸைது அவர்களுடைய இரண்டாவது மகள் ஹஸ்ரத் ஹபீபா பின்த் கார்ஜா ஆகும். அவர்களுடைய திருமணம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் நடந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்த போது அவர்களது மனைவி ஹஸ்ரத் ஹபீபா கர்ப்பமாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபகர் (ரலி) அவர்கள், நான் இவர்களுக்கு பெண் குழந்தை பிறக்கும் என்று நம்புகின்றேன் என்று கூறினார்கள். அவ்வாறே அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 640–641, ஹார்ஜா பின் ஸைது, 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒரு சஹாபியின் பெயர் ஸயாத் பின் வலீத் ஆகும். அவர்களுடைய தாயின் பெயர் உம்ரா பின்த் உபைது அத்ரூஃப் ஆகும். ஹஸ்ரத் ஸியாத் அவர்களின் ஒரு மகன் அப்துல்லாஹ் ஆவார். உக்பா சானியாவில் 70 சஹாபாக்களுடன் அன்னார் வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு மதீனா வந்தடைந்த உடனேயே தமது பனூ பயாஸா என்ற கோத்திரத்தின் சிலையை உடைத்தார்கள்.

அவர்கள் சிலைகளை வணங்கி வந்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மக்காவிற்குச் சென்றார்கள். மேலும் அங்கேயே தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா ஹிஜ்ரத் செய்யும் வரை அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு ஹிஜ்ரத் செய்தார்கள்.

இதனால் ஹஸ்ரத் ஸியாத் அவர்கள் முஹாஜிர் அன்ஸாரி என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் முஹாஜிராகவும் இருந்தார்கள். அன்ஸாராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் ஸியாத் பதர் போர், அகழ் போர் மேலும் பல போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு உடனிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 302, ஸியாத் பின் வலீத் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹயா அத்தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தடைந்து பனூ பயாலா கோத்திரத்தின் முஹல்லாவைக் கடந்த போது ஹஸ்ரத் ஸியாத் அவர்கள் அஹ்லன் வ ஸஹ்லன் என்று கூறினார்கள். மேலும் தங்குவதற்காக தமது வீட்டை அர்ப்பணித்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது ஒட்டகத்தை சுதந்திரமாக விட்டு விடுங்கள். அதுவே தனது இருப்பிடத்தை தேடிக் கொள்ளும் என்று கூறினார்கள்.

ஹிஜ்ரி ஒன்பதாவது ஆண்டின் முஹர்ரம் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸதகா மற்றும் ஸக்காத் வசூலிப்பதற்காக தனித்தனியாக

வசூலிப்பவர்களை நியமித்தார்கள். ஹஸ்ரத் ஸியாத் அவர்களை ஹஸ்ரே மவ்த் என்ற இடத்தில் வசூல் செய்வதற்காக நியமித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டம் வரை அவர்கள் இந்த தொண்டை செய்வதற்காக நியமிக்கப்பட்டார்கள். இந்த அரியனையிலிருந்து விலகிய பிறகு அன்னார் தமது இருப்பிடத்தை கூஃபாவிற்கு மாற்றினார்கள். மேலும் ஹிஜ்ரி 41 வது ஆண்டில் மரணமடைந்தார்கள்.

(தாலிப் அல்ஹாஷிமி அவர்கள் எழுதிய சர்வரே காயினாத் கே பச்சாஸ் சஹாபா பக்கம் 557–559, 1985 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள மீட்டர் வ பிரின்டர்ஸ் அச்சிடப்பட்டது)

வரலாற்றில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்றவர்களின் குழப்பங்கள் வலுவடைந்தது. மேலும் ஸக்காத் கொடுப்பதை அவர்கள் மறுத்தனர். அப்போது அஷ்அஸ் பின் கைஸ் அல்கன்தி என்பவரும் மார்க்கத்தை துறந்து சென்று விட்டார்.

இவர்களை கொல்வதற்காக ஹஸ்ரத் ஸியாத் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அன்னார் அவன் மீது தாக்குதல் நடத்திய போது அவர் நஹீர் என்ற குகைக்குள் அடைக்கலம் புகுந்தான்.

ஹஸ்ரத் ஸியாத் அவர்கள் அவர்களை கடுமையாக பின்தொடர்ந்ததால் ஒரு தூதை அனுப்பினான். அதில் என்னுடன் சேர்த்து மேலும் ஒன்பது நபர்களுக்கு நீங்கள் அமைதியை வழங்குங்கள். அவ்வாறு வழங்கினால் நான் இதன் கதவுகளை திறப்பேன் என்று கூறினான்.

ஹஸ்ரத் ஸியாத் அவர்கள், உடன்படிக்கை எழுதி கொண்டு வாருங்கள். நான் அதில் முத்திரை இடுகிறேன் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் கதவை திறந்தார்கள். உடன்படிக்கையை பார்த்த போது மற்ற ஒன்பது நபர்களுடைய பெயர் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அஷ்அஸ் தமது பெயரை எழுத மறந்து விட்டான். இவ்வாறு அவன் மற்ற கைதிகளோடு மதீனாவிற்கு அனுப்பப்பட்டு விட்டான்.

(அம்தாவுல் அஸ்மாஃ தொகுதி 14 பக்கம் 254–255, 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் مُعَطِّبِ بن عُبَيْد ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஓர் சஹாபி ஆவார்கள். அவர்களுக்கு எந்த குழந்தையும் கிடையாது. அவர்களுடைய மருமகன் உஸைர் பின் உர்வா அவர்களது வாரிசானார்கள். ஹஸ்ரத் مُعَطِّبِ بن عُبَيْد அவர்கள் உஹது போரில் கலந்து கொண்டார்கள். மேலும் ரஜீஃ தினத்தன்று அவர்கள் ஷஹாதத் பதவியை அடைந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 240, ஸியாத் பின் வலீத் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹயா அத்தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவம் இவ்வாறாகும். அந்த நாளில் பத்து முஸ்லிம்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். அந்த நாள் முஸ்லிம்களுக்கு மிகவும் அபாயகரமான நாளாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நாலா புறமிருந்தும் பல்வேறு செய்திகள் கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அன்னாருக்கு குறைஷிகளினால் தான் அதிக அபாயகரமான நிலை இருந்தது. ஏனெனில் அவர்கள் உஹது போரின் காரணமாக மிகுந்த தைரியத்தை வெளிப்படுத்தியவாறு இருந்தார்கள்.

இந்த அபாயத்தை உணர்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தின் நான்காம் வருடத்தின் ஸஃபர் மாதத்தில் தமது பத்து சஹாபாக்களை கொண்ட ஒரு குழுவை ஆயத்தம் செய்தார்கள். அவர்களுக்கு அஹ்ஸன் பின் சாபித் அவர்களை அமீராக நியமித்தார்கள். அவர்களிடம், மறைமுகமாக மக்காவை சென்றடைந்து அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொண்டு அவர்களது நடவடிக்கைகள் மற்றும் அவர்களது எண்ணங்கள் ஆகிவற்றைப் பற்றி தெரிவிக்குமாறு கட்டளையிட்டார்கள்.

ஆனால் இந்த குழு செல்வதற்கு முன்னதாகவே அஸல் மற்றும் அகாரா கோத்திரத்தைச் சார்ந்த சில மக்கள் அன்னாரிடம் வந்து, எங்களுடைய கோத்திரத்தைச் சார்ந்த பலருக்கு இஸ்லாத்தின் மீது தாக்கம் ஏற்பட்டுள்ளது.

எனவே நீங்கள் சிலரை எங்களை முஸ்லிமாக்குவதற்கும், இஸ்லாத்தின் போதனைகளை எங்களுக்கு கற்றுத் தரவும் எங்களுடன் சிலரை அனுப்புங்கள் என்று கூறினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களது விருப்பத்தை அறிந்து கொண்டு எந்த குழுவை செய்தி சேகரிப்பதற்காக ஆயத்தம் செய்து வைத்திருந்தார்களோ அவர்களை இவர்களுடன் அனுப்பினார்கள். ஆனால் இம்மக்கள் பொய்யர்கள் ஆவர் என்பதும், பனூ லஹானின் தூண்டுதலின் பெயரில் தான் இவர்கள் மதீனா வந்தார்கள் என்பதும், மேலும் அவர்கள் சுஃப்யான் பின் காலித் அவர்களின் கொலைக்கு பதிலாக பழிவாங்குவதற்காக தான் இப்படியான சூழ்ச்சியை செய்தார்கள் அதாவது முஸ்லிம்கள் மதீனாவிலிருந்து வெளியேறியதும் அவர்கள் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும் என்பது பிறகு தான் தெரிய வந்தது.

மேலும் பனு லஹான் இந்த தொண்டிற்கு பகரமாக அஸல் மற்றும் காராவின் மக்களுக்கு அதிகமான ஒட்டகங்களை பரிசாக தருவதாக நிர்ணயித்திருந்தான். அஸல் மற்றும் காராவின் இந்த ஏமாற்றக்கூடிய மக்கள் அஸ்ஃபான் மற்றும் மக்காவிற்கிடையே வந்தடைந்த போது பனு லஹானிற்கு முஸ்லிம்கள் தங்களுடன் வந்து கொண்டிருக்கின்ற செய்திகளை இரகசியமான முறையில் தூது அனுப்பினான்.

அதன் விளைவாக பனு லஹானின் 200 இளைஞர்கள் அவர்களில் நூறு பேர் வில் ஏய்வதில் புலமை பெற்றவர்கள் ஆவர். அவர்கள் முஸ்லிம்களை பின் தொடர்வதற்காக வந்தனர். மேலும் ரஜீஃ என்ற இடத்தில் அவர்களை சிறைபிடித்தனர். பத்து நபர்கள் 200 பேருடன் எவ்வாறு பேரிட முடியும்?

ஆனால் முஸ்லிம்களுக்கு ஆயுதத்தை கீழே போடுவதற்கான போதனை கொடுக்கப்படவில்லையே! இப்படிப்பட்ட நிலை உருவானால் அதாவது உங்களை சுற்றி வளைத்தால் நீங்கள் போர் செய்யுங்கள் என்ற கட்டளையே உள்ளது.

அப்போது உடனடியாக ஒரு சஹாபி அருகிலிருந்த ஒரு மலையின் உச்சியில் ஏறியவாறு போருக்காக ஆயத்தமானார்கள். அப்போது நிராகரிப்பவர்களான அவர்களுக்கு ஏமாற்றுவது என்பது ஒரு தவறான செயலாக இருக்கவில்லை. எனவே நிராகரிப்பவர்களாகிய அவர்கள், நீங்கள் கீழே இறங்கி வாருங்கள். உங்களை கொல்ல மாட்டோம் என்ற ஒரு உறுதியான வாக்குறுதியை நாங்கள் தருகின்றோம் என்று கூறினர். ஆஸிம் (ரலி) அவர்கள் அவர்களிடம், உங்களுடைய வாக்குறுதியின் மீது எங்களுக்கு எந்த நம்பிக்கையும் கிடையாது. உங்களுடைய இந்த உத்தரவாதத்தால் நாங்கள் இறங்க மாட்டோம் என்று பதில் கூறினார்கள்.

மேலும் அவர்கள் வானத்தை நோக்கி பார்த்தவாறு, இறைவா! நீ எங்களுடைய நிலைமையை பார்க்கின்றாய். உனது ரஸூலுக்கு இதைப்பற்றிய செய்தியை நீ தெரிவித்து விடு என்று கூறினார்கள்.

இறுதியாக ஆஸிம் மற்றும் அவர்களுடன் உள்ள அனைவரும் சண்டையிட்டவாறே ஷஹீதானார்கள். ஏழு சஹாபாக்கள் கொல்லப்பட்டார்கள். மேலும் ஹபீப் பின் அதி மற்றும் ஸைது பின் தஸ்னா மேலும் ஒரு சஹாபி எஞ்சியிருந்தார்கள். இவர்களை உயிரோடு பிடிக்க வேண்டும் என்பதே நிராகரிப்பவர்களின் உண்மையான நோக்கமாக இருந்தது. அதனால் அவர்கள் மீண்டும் உரத்த குரலில், இப்போதாவது கீழே வாருங்கள். நாங்கள் உங்களுக்கு கஷ்டத்தை கொடுக்க மாட்டோம் என்ற வாக்குறுதியை வழங்குகின்றோம் என்று கூறினர்.

இப்போது இந்த முஸ்லிம்கள் இவர்களது வலையில் சிக்கி கீழே இறங்கினர். ஆனால் கீழே இறங்கிய உடனேயே நிராகரிப்பவர்கள் அவர்களை தமது விற்கள் மற்றும் அம்புகளைக் கொண்டு அவர்களை சிறைபிடித்தனர். இதனால் ஹபீப் பின் ஸைது மற்றும் அவர்களுடன் உள்ள மற்றவர்கள், வரலாற்றில் அவர்களில் ஒருவரது பெயர் அப்துல்லாஹ் பின் தாரிக் என்று குறிப்பிடப்பட்டுள்ளது பொறுமையிழந்தவாறு உரத்த குரலில், நீங்கள் வாக்குறுதியை மீறி விட்டீர்கள். நீங்கள் இதற்குப் பிறகு எவ்வாறு நடந்து கொள்வீர்கள் என்பது தெரியாது என்று கூறினார்கள். அப்துல்லாஹ் அவர்கள் நிராகரிப்பவர்களுடன்

செல்ல மறுத்து விட்டார். இதன் விளைவாக நிராகரிப்பவர்கள் சிறிது தூரம் வரை அவர்களின் உடலை இழுத்துக் கொண்டே சென்றனர். மேலும் அவர்களை கொன்று அங்கேயே எறிந்து விட்டனர். இவ்வாறு அவர்கள்து பழிவாங்குதல் நிறைவேறியது.

எனவே குறைஷிகளை மகிழ்விப்பதற்காக மேலும் பணத்தை பெற வேண்டும் என்பதற்காகவும் ஹபீப் மற்றும் ஸைது அவர்களுடன் மக்காவிற்கு சென்றார்கள். அங்கு சென்றடைந்த பிறகு அவர்களை விற்று விட்டார்கள். ஹபீப் அவர்கள் ஹாரிஸ் பின் ஆமிர் பின் நவ்ஃபல் என்பவர் வாங்கினார். ஏனென்றால் ஹாரிஸ் என்பவரை பதர் போரில் ஹபீப் அவர்கள் கொன்றார்கள். மேலும் ஸைது அவர்களை சஃப்வான் பின் உமய்யா என்பவன் வாங்கினான். இவர்களும் இறுதியில் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலிலிருந்து – பக்கம் 513–514)

பதர் யுத்தத்தில் கலந்து கொண்ட இன்னொரு சஹாபியான காலித் பின் பகீர் அவர்களுடைய குறிப்பும் உள்ளது. ஹஸ்ரத் காலித் பின் பகீர் ஆகில் மற்றும் ஹஸ்ரத் ஆமிர் ஹஸ்ரத் அயாஸ் ஆகியோர் தாரே அர்கம் என்ற இடத்தில் வைத்து இஸ்லாத்தை தழுவினார்கள். இந்த நான்கு சகோதர்களும் தாரே அர்கமில் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் பகீர் மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் தஸ்னாவிற்கிடையே சகோதர உறவை நிலைநாட்டினார்கள்.

அன்னார் பதர் மற்றும் உஹது யுத்தங்களில் கலந்து கொண்டார்கள். முதலில் கூறப்பட்ட அந்த சம்பவத்தில் அதாவது பத்து நபர்களை ரஜீஃ என்ற இடத்தில் ஏமாற்றி அழைத்துச் சென்று ஷஹீதாக்கப்பட்ட நபர்களில் இவர்களும் ஒருவர் ஆவார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 297, ஆகில் பின் அபீ அல் பகீர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதர் போருக்கு முன்னதாக அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களின் தலைமையில் குறைஷிகளை எதிர்கொள்வதற்காக அனுப்பினார்கள். அதில் ஹஸ்ரத் காலித் பின் பகீர் அவர்களும் இருந்தார்கள். அன்னார் ஹிஜ்ரத்தின் 4 வது ஆண்டில் ஸஃபர் மாதத்தில் தமது 34 வது வயதில் ரஜீஃ போரில் ஆஸிம் பின் சாபித் மற்றும் مَرْثَدبن ابی مَرْثَدغَنوِی இணைந்து அஸல் மற்றும் காராவிற்கு எதிராக சண்டையிட்டவாறு ஷஹீதானார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 647 – காலித் பின் பகீர், 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்கள்: அஸல் மற்றும் காரா கோத்திரத்தைச் சார்ந்த மக்கள் சஹாபாக்களை அழைத்தக் கொண்டு ரஜீஃ என்ற இடத்தை அடைந்தனர். ரஜீஃ என்ற அந்த இடமானது அஸல் கோத்திரத்தினரின் ஒரு நதியின் பெயராகும். அது ஹிஜாஸ் என்ற இடத்தில் இருக்கின்றது. அம்மக்கள் சஹாபாக்களை ஏமாற்றி அவர்களை அழைத்து வந்தனர். மேலும் அஸல் கோத்திரத்தினரை இவர்களுக்கு எதிராக தூண்டினர்.

அப்போது சஹாபாக்கள் ஒரு கூடாரத்தில் இருந்தனர். மேலும் நாலா புறத்திலிருந்தும் மக்கள் வாளை எடுத்துக் கொண்டு வருவதை சஹாபாக்கள் கண்டனர். சஹாபாக்களும் சண்டையிடுவதற்கு ஆயத்தமாயினர்.

அந்த நிராகரிப்பவர்கள் கூறினர். அதாவது இறைவன் மீது ஆணையாக! நாங்கள் உங்களை கொலை செய்ய மாட்டோம். உங்களை நாங்கள் மக்கத்து காஃபிர்களிடத்தில் ஒப்படைப்பதே எங்களது விருப்பமாகும். உங்களை அவர்களிடத்தில் ஒப்படைத்து விட்டு அதற்குப் பகரமாக அதற்கான கூலியை நாங்கள் பெற்றுக் கொள்வோம் என்று நிராகரிப்பவர்கள் கூறினர்.

ஹஸ்ரத் முர்ஸத் பின் அபீ முர்ஸத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஆஸிம் பின் சாபித் (ரலி) மற்றும் ஹஸ்ரத் காலித் பின் பகீர் (ரலி) ஆகியோர் இவ்வாறு கூறினர். அதாவது இறைவன் மீது ஆணையாக! நாங்கள் இணை வைப்பவர்களின் கைகளில் எங்களை கொண்டு செல்ல விட மாட்டோம் என்று கூறினர். இறுதியில் இந்த மூவரும் சண்டையிட்டவாறே ஷஹீதாக்கப்பட்டனர்.

(சீரத் இப்னு ஹிஷாம், பக்கம் 591,592, திக்ர் யவ்முர் ரஜீஃ ஃபீ சனத சலாஸ, 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹுஸ்ஸாம் பின் சாபித் இவர்களைப் பற்றி தமது ஓர் கவிதையில் இவ்வாறு எழுதுகின்றார்கள்.

اَلَا لَیۡتَنِی فِیۡہَا شَہِدۡتُ ابۡنَ طَارِقٍ وَزَیۡدًا وَمَا تُغۡنِی الۡاَمَانِیۡ وَمَرۡثَدًا
فَدَافَعۡتُ عَنۡ حِبِّی خُبَیۡبٍ وَعَاصِمٍ وَکَانَ شِفَاءً لَوۡ تَدَارَکۡتُ خَالِدًا

அதாவது நான் ரஜீஃ சம்பவத்தின் போது இப்னு தாரிக், ஸைது மற்றும் முர்ஸித் ஆகியோருடன் இருந்திருக்க வேண்டுமே!

ஆசைகள் மட்டும் எந்த பயனையும் தராது தான். ஆனால் நான் எனது நண்பர்களான ஹபீப் மற்றும் ஆஸிம் ஆகியோரை காப்பாற்றியிருக்க வேண்டுமே! நான் காலிதை கண்டிருந்தால் அவரும் காப்பாற்றப்பட்டிருப்பாரே!

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 647, காலித் பின் பகீர், 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஆக, இவர்கள் தான் மார்க்கத்தை பாதுகாப்பதற்காக, தமது ஈமானை பாதுகாப்பதற்காக தியாகங்களை செய்தனர். அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியவர்களாக ஆகினர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு நூலில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

கருணை காட்டக்கூடிய, துன்பங்களை அகற்றக் கூடிய அந்த இறைவனுக்கு நன்றி. அவனது தூதர் மீது அருளும், சாந்தியும் உண்டாவதாக. அவர் தூய உள்ளம் படைத்தவர். சுவர்க்கத்தின் பக்கம் ஈர்க்கக்கூடியவர்.

அன்னாரது சஹாபாக்கள் மீது சாந்தி நிலவட்டுமாக. அவர்கள் ஈமான் என்ற நீரூற்றின் பக்கம் தாகத்தை உடையவர்களைப் போன்று ஓடினர். மேலும் வழிகேடு என்ற அந்த இரவை தமது அறிவின் மூலமாகவும் செயலின் மூலமாகவும் ஒளியூட்டினார்கள்.

(நூருல் ஹக் பாகம் 2, ரூஹானி கஸாயின் தொகுதி 8 பக்கம் 188)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சஹாபாக்கள், பகலில் போர்க்களத்தில் சிங்கமாகவும், இரவில் ராஹிபாகவும் விளங்கினார்கள். மேலும் மார்க்கத்தின் நட்சத்திரங்களாக அவர்கள் திகழ்ந்தார்கள்.

இரவுப் பொழுதின் ராஹிப் என்பது இரவில் இறைவணக்கம் செய்யக்கூடியவர்கள் மேலும் மார்க்கத்தின் நட்சத்திரம் என்றும் பொருள்படும். இறைதிருப்தி அவர்களுடன் இருந்தது.

(நஜ்முல் ஹுதா, ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 17)

அல்லாஹ் நமக்கும் நமது அறிவு மற்றும் செயல் நிலைமைகளை சிறந்ததாக ஆக்கிக் கொள்வதற்கும், இரவில் இறைவணக்கங்களின் தரத்தை உயர்த்துவதற்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அது உகண்டா நாட்டின் முபல்லிக் மதிப்பிற்குரிய இஸ்மாயீல் மாலா காலா சாஹிப் அவர்ளுடையதாகும். மே 25 ஆம் தேதி ஜுமுஆவிற்கு முன்பாக மாரடைப்பின் காரணமாக தம்மை படைத்தவனிடம் சென்று சேர்ந்தார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அன்னாருக்கு வயது 64 ஆகும். இஸ்மாஹீல் மாலா கானா சாஹிப் அவர்கள் 1954 ஆம் ஆண்டு உகண்டாவிலுள்ள மகோனோ மாவட்டத்தில் பிறந்தார்கள். இவர்களது தாய், தந்தை ஆகிய இருவரும் கிருத்தவராக இருந்தார்கள். எனவே அன்னாரும் பிறக்கும் போது கிருத்தவராகவே இருந்தார்கள். இஸ்மாஹீல் மாலா கானா சாஹிப் அவர்களுக்கு ஹாஜி ஷுயைப் நஸீர் சாஹிப் என்ற ஓர் அஹ்மதி நண்பர் இருந்தார். இவர்கள் ஹாஜி சாஹிப் அவர்களது வீட்டிற்கு

*(தொடர்ச்சி 15 வது பக்கம்...)*

# ஜுமுஆ பேருரை

**இறையச்சத்தின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடியவர், அல்லாஹ்வின் கட்டளைகளை பேணக்கூடியவர், அல்லாஹ்வின் அடையாளங்கள் மீது முழுமையாக நம்பிக்கை கொள்பவர், அல்லாஹ்வின் முன்னிலையில் குனிபவர் ஆகியோர்களுக்குத்தான் அல்லாஹ்வின் கருணை சென்றடையும். ஆக நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வது மற்றும் இறையச்சத்தின்படி செயல்படுவது மற்றும் முழுமையான ஈமானை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்**

**ரமலானில் மனிதன் நோன்பு வைப்பதோடு அல்லாஹ்வின் கட்டளைகளை முன்பை விட அதிகமாக பேணி நடக்க வேண்டும். மேலும் தனது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். மேலும் இறையச்சத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும். அவ்வாறு செய்தால் மனிதன் இறைவனது கருணையின் விரிப்பில் அவன் முன்பை விட அதிகமாக வந்து விடுகின்றான்**

**தவ்பா மற்றும் இஸ்திஃபார் அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பதற்குரிய வழியாக இருக்கின்றது**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் தவ்பா மற்றும் இஸ்திஸபார் ஆகியவற்றின் உண்மைத்துவம் மற்றும் இதன் முக்கியத்துவம், மேலும் இதன் விளைவாக கிடைக்கக்கூடிய பலன்கள் மற்றும் அருள்கள் தொடர்பான குறிப்புகள்**

**அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவதற்கும், அவனது உதவி மற்றும் கருணையை பெறுவதற்கு முயற்சி, இஸ்திஃபார் மற்றும் தவ்பா செய்வது அவசியமாகும்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு முறை ஜமாஅத் மக்களிடம் இந்த துஆவை அதிகம் அதிகமாக ஓத வேண்டும் என்று கவனமூட்டினார்கள். அந்த துஆ இதுவாகும்.**

رَبَّنَآ اٰتِنَا فِی الدُّنْیَا حَسَنَۃً وَّفِی الْاٰخِرَۃِ حَسَنَۃً وَّقِنَا عَذَابَ النَّارِ

**ஆக, இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலமாக அல்லாஹ் நம்மீது கருணை காட்டியவாறு இவ்வுலக மற்றும் மறு உலகத்தின் எல்லா விதமான நெருப்பிலிருந்தும் நம்மை காப்பாற்ற வேண்டும்**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**8 ஜுன் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **8 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ
وَاكْتُبْ لَنَا فِيْ هٰذِهِ الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ
اِنَّا هُدْنَآ اِلَيْكَ ؕ قَالَ عَذَابِيْٓ اُصِيْبُ بِهٖ مَنْ
اَشَآءُ ۚ وَرَحْمَتِيْ وَسِعَتْ كُلَّ شَيْءٍ ؕ
فَسَاَكْتُبُهَا لِلَّذِيْنَ يَتَّقُوْنَ وَيُؤْتُوْنَ الزَّكٰوةَ
وَالَّذِيْنَ هُمْ بِاٰيٰتِنَا يُؤْمِنُوْنَ

இந்த வசனத்தின் பொருள். நீ எங்களுக்கு இவ்வுலகிலும், மறுமையிலும் நன்மையினை எழுதுவாயாக. நாங்கள் உன்னிடமே தவ்பா செய்தவாறு வந்து விட்டோம். (இதற்கு அல்லாஹ்) என் தண்டனையை நான் விரும்பியவருக்கு (அதாவது தண்டனைக்குரியவர்களுக்கு)க் கொடுக்கின்றோம். ஆனால் என் கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. எனவே இறையச்சத்தை மேற்கொண்டு ஸகாத் கொடுப்போருக்கும் மேலும் நம் வசனங்கள் மீது நம்பிக்கை கொள்வோருக்கும் நாம் அதனை கட்டாயம் எழுதுவோம் எனக் கூறினான். (7:157)

இந்த வசனத்திலிருந்து தெரிய வருகின்றது போன்று தன் அடியார்கள் மீது அல்லாஹ்வின் பேருபகாரமானது வியக்கத்தக்கதாக இருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். என் கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது.

ரஹ்மத் என்பதன் பொருள் என்னவென்றால், மென்மை, கருணை காட்டுவது மற்றும் கருணையை பொங்கி எழச் செய்வது என்பதாகும். அதாவது அல்லாஹ் தன் அடியார்களோடு மென்மையுடனும், கண்டும் காணாமலும் நடந்து கொள்கின்றான். அது ஓர் எல்லைக்குட்பட்டதாக இருப்பதில்லை.

அல்லாஹ் தன் அடியார்களோடு மென்மையுடன் நடந்து கொள்வது ஓர் எல்லைக்குட்பட்டதல்ல. அல்லாஹ்வுடைய கருணையின் உணர்வு மற்றும் அடியார்களோடு நல்ல முறையில் நடந்து கொள்வது எந்த அளவு பரந்து விரிந்ததாக இருக்கின்றதென்றால் அது எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. அவனுடைய கருணையில் ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத் என்ற பண்பும் இருக்கின்றது. இது அவனுடைய ரஹ்மானிய்யத் என்ற பண்பாகும். அதாவது அவன் எதையும் கேட்காமலேயே எண்ணற்ற பொருட்களை உலகத்தில் மனிதர்களுக்காக படைத்துள்ளான்.

பிறகு ரஹீமிய்யத் என்ற பண்பை அவன், அல்லாஹ்வின் உரிமைகளை செலுத்தக் கூடியவர்களுக்கும், அவனுடைய கட்டளைகளின்படி நடக்கக் கூடியவர்களுக்கும், அவன் முன்னால் குனிந்து கேட்பவர்களுக்கும் முன்னால் வெளிப்படுத்துகின்றான்.

ஆக இங்கு அல்லாஹ் அடியார்களுக்கு தண்டனை கொடுப்பது எனது நோக்கமல்ல என்று கூறுகின்றான். தண்டனை கொடுக்க வேண்டுமென்றால் மனிதனை ஏன் படைத்தான்? என்று சிலருக்கு இது தொடர்பாக சில தவறான எண்ணங்கள் இருக்கின்றன. அல்லாஹ் கூறுகின்றான். இது எனது நோக்கமல்ல. ஆனால், எனது தண்டனைக்கு யார் ஆளாகின்றார்கள் என்றால் அவர்கள் தமது தவறான செயல்களில் உச்ச நிலையை அடைந்திருப்பார்கள். ஆனால் எனது இந்த தண்டனையும் கூட தற்காலிகமானதேயாகும். இது சீர்திருத்தம் மற்றும் தான் செய்த தவறை உணர்ந்து கொள்வதற்காகவே ஆகும்.

எதுவரையென்றால், ஒருநேரம் வரும். அப்போது நரகத்தில் இருப்பவர்கள் கூட எனது பரந்த கருணையிலிருந்து பங்கு பெறுவார்கள். மேலும் அவர்களுக்குரிய தண்டனையும் முடிந்து விடும். நரகத்தின் தண்டனையும் கூட அவர்களது தவறான செயல்களின் விளைவாகவே கிடைக்கும். மேலும் அது அவர்களது சீர்திருத்தத்திற்கு காரணமாக அமைந்து விடும். ஆக, இந்த தண்டனையும் கூட சீர்திருத்தத்திற்காகவே ஆகும். தண்டனைக்குரிய இந்த காலகட்டமும் கூட ஒருவகையில் கருணையே ஆகும்.

ஆனால் அல்லாஹ் தீர்ப்பு நாளின் எஜமானனும் ஆவான். எனவே நமது பார்வையில் வெளிப்படையாக குற்றவாளியாக இருக்கக்கூடிய மக்களை கூட அவன் தனது கருணை மற்றும் மன்னித்தல் என்ற போர்வையால் அவர்களை

சூழ்ந்து எவ்வித தண்டனையும் வழங்காமல் அவர்களை சுவர்க்கத்திற்கு அனுப்ப இயலும். ஆனால் அவன் நம்மை நன்மையான வழிகளில் செல்லுமாறு கவனமூட்டியவாறு என் கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது என்று கூறியுள்ளான். எவர் இறையச்சத்தை மேற்கொள்கின்ற, ஸக்காத் கொடுக்கின்ற, மேலும் எனது அடையாளங்கள் மீது நம்பிக்கை கொள்கின்ற, மேலும் அல்லாஹ்வின் வசனங்கள் மீது ஈமான் கொள்கின்ற அத்தகையவர்கள் மீது நிச்சயமாக எனது கருணையை பெழிவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இறையச்சத்தின்படி செ்யல்படக்கூடிய, ஸக்காத் கொடுக்கக்கூடிய, மேலும் அல்லாஹ்வின் கட்டளைகளின் மீது அதற்குரிய உரிமையை செலுத்தியவாறு நிச்சய உறுதியுடன் அமல் செய்பவர்கள், அல்லாஹ்வின் வசனங்கள் மீது முழுமையாக நம்பிக்கை கொள்ளக் கூடியவர்கள் ஆகியோரை நிச்சயமாக நான் எனது கருணையின் போர்வையால் சூழ்ந்து கொள்வேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

பிறிதோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

إِنَّ رَحْمَتَ اللَّهِ قَرِيبٌ مِّنَ الْمُحْسِنِينَ

அதாவது அல்லாஹ்வின் கருணையானது நிச்சயமாக முஹ்ஸின் அதாவது நல்லடியார்களோடு இருக்கின்றது.

முஹ்ஸின் யாரென்றால், அவர்கள் எல்லா நிபந்தைனைகளுடன் தமது பணியை முழுமை செய்பவர்கள் ஆவர். ஆக, இறையச்சத்தின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடியவர், அல்லாஹ்வின் கட்டளைகளை பேணக்கூடியவர், அல்லாஹ்வின் அடையாளங்கள் மீது முழுமையாக நம்பிக்கை கொள்பவர், அல்லாஹ்வின் முன்னிலையில் குனிபவர் ஆகியோர்களுக்குத்தான் அல்லாஹ்வின் கருணை சென்றடையும். ஆக நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வது மற்றும் இறையச்சத்தின்படி செயல்படுவது மற்றும் முழுமையான ஈமானை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் அம்மனிதரை நம்பிக்கையாளர் என்று அழைக்கப்பட முடியும்.

அல்லாஹ்வின் கருணையானது அவனது கட்டளைகளை அதற்குரிய நிபந்தனைகளுடன் நிறைவேற்றுபவருக்கு அருகில் இருக்கின்றது என்ற அல்லாஹ்வின் இந்த அறிவிப்பிலிருந்து பயன்பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் இவ்வாறு நீங்கள் செய்தால் அல்லாஹ்வின் கருணை உங்களை சூழ்ந்து கொள்ளும் என்று அல்லாஹ் கூறுகின்றான். இதனை அவன் தன்மீது கடமையாக்கியுள்ளான். மேலும் அவன் அதனை எழுதி விட்டான். எந்த அளவிற்கு கருணைகாட்டக்கூடிய இறைவனாக நமது இறைவன் இருக்கின்றான்!

நாம் அல்லாஹ்வின் அடியார்கள் ஆவோம். அடியான் எவ்வாறு தன் எஜமானன் மீது தனது உரிமையை செலுத்த இயலும்? ஆனால் வானம் மற்றும் பூமியின் இறைவனான அந்த இறைவன், நீங்கள் இறையச்சத்தின்படி செயல்பட்டால், எனது கட்டளைகளின்படி செயல்பட்டவாறு எனது அடையாளங்கள் மீது நம்பிக்கை கொண்டால் நிச்சயமாக எனது கருணைக்கு உரிமையாளராக ஆகிவிடுவீர்கள் என்று கூறுகின்றான்.

முதலாவதாக இங்கு அல்லாஹ் தக்வாவை அதாவது இறையச்சத்தை பற்றி குறிப்பிடுகின்றான். உண்மையில் தக்வாவைப் பற்றிய அறிவு நமக்கு கிடைத்து விட்டால் பிறகு மற்ற நன்மைகள் மற்றும் ஈமானில் முழுமையடைவது பற்றி தெரிந்து விடும். அது அதற்குள்ளேயே வந்து விடுகின்றது.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

மனிதனது எல்லா விதமான ஆன்மீக அழகும் தக்வாவின் நுட்பமான வழிகளில் அடியெடுத்து வைப்பதிலேயே இருக்கின்றது. தக்வாவின் நுட்பமான வழிகள், ஆன்மீக அழகின் நுட்பமான நகலாகவும் வடிவமாகவும் இருக்கின்றன.

மேலும் இறைவனது அமானிதங்களையும், ஈமானின் உடன்படிக்கைகளையும் தம்மால் இயன்ற அளவு கடைபிடிப்பது அதாவது அதனை சரியான முறையில் கடைபிடிப்பது, மேலும் தலை முதல் கால் வரையுள்ள மனிதனது அனைத்து ஆற்றல்கள் மற்றும் உறுப்புகள், அதில் வெளிப்படையாக உள்ள கண்கண், காதுகள் மேலும் கை மற்றும் கால் மற்றும் இதர உறுப்புகள் இருக்கின்றன. மேலும் மறைவாக உள்ள உள்ளம் மற்றும் மற்ற ஆற்றல்கள் மற்றும் ஒழுக்கங்கள் ஆகிய இவை எல்லாவற்றையும் உங்களது சக்திக்கு உட்பட்டவாறு தகுந்த சயமத்தில் அவற்றை பயன்படுத்துவது மேலும் சரியான முறையில் இவற்றை பயன்படுத்துவது, மேலும் அல்லாஹ் கூறியுள்ள கட்டளைகளின்படி அமல் செய்வது, அதன் உரிமைகளை செலுத்துவது, மேலும் ஆகுமானதற்ற இடங்களிலிருந்து விலகியிருப்பது, மேலும் அதன் மறைமுகமான தாக்குதல்களிலிருந்து எச்சரிக்கையாக இருப்பது, மேலும் அதனை தவறாக பயன்படுத்துவதிலிருந்து தடுப்பது, மேலும் ஷய்த்தான் எந்த உறுப்புகள் மூலமாக மறைமுகமாக தாக்குதல் நடத்துகின்றானோ அதிலிருந்து எச்சரிக்கையாக இருப்பது ஆகிய இவை அனைத்தும் மனிதனின் பணியாகும் என்பது வெளிப்படையானதாகும்.

அப்போது தான் அவன் உண்மையான இறையச்சத்தின்படி செயல்பட முடியும். அப்போது தான் அவனால் அல்லாஹ்வின் கட்டளைகளை சரியான முறையில் நிறைவேற்ற முடியும்.

மேலும் கூறினார்கள்: அத்துடன் அடியார்களுக்குரிய உரிமையை செலுத்தவும் வேண்டும். மனிதனது அனைத்து ஆன்மீக அழகும் இத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது. திருக்குர்ஆனில் அல்லாஹ் இறையச்சத்தை ஆடை என்ற பெயரால் அழைக்கின்றான். லிபாசுத் தக்வா என்பது திருக்குர்ஆனின் சொல்லாகும்.

இது இந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது ஆன்மீக அழகானது தக்வாவின் மூலமாகவே உருவாகின்றது. மேலும் தக்வா என்னவென்றால், மனிதன் இறைவனது அனைத்து அமானிதங்களையும், ஈமானின் உடன்படிக்கைகளையும், அவ்வாறே படைப்பினங்களின் அனைத்து அமானிதங்களையும், உடன்படிக்கைகளையும் தன்னால் இயன்ற வரை செலுத்தவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் அவன் மீது அவனுக்கு இருக்கின்ற நுட்பமான விஷயங்களையும் கூட மனிதன் தனது சக்திக்கேற்ப செலுத்த வேண்டும். அதன்படி அமல் செய்ய வேண்டும்.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, ரூஹானி கஸாயின் தொகுதி 21 பக்கம் 209,210 அடிக்குறிப்பு)

இந்த தரத்தை மனிதன் அடைந்து விட்டால் அல்லாஹ்வின் கருணையானது தனது அடியார்கள் மீது கடமையாகி விடுகின்றது. அதாவது அல்லாஹ் தானே தன்மீது இதனை கடமையாக்கி விடுகின்றான். நான் கூறியது போன்று அடியான் அல்லாஹ்விடம் தனக்குரிய உரிமை என்று எதனை அவனால் கேட்க இயலும்?

நாம் தற்போது கடந்து கொண்டிருக்கின்ற நாட்கள் ரமலானின் நாட்களாகும். இதன் கடைசி வாரம் தற்போது எஞ்சியிருக்கின்றது. இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ரமலான் மாதத்தில் சுவர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் கதவுகள் அடைக்கப்படுகின்றது. மேலும் ஷய்த்தான் பிணைக்கப்படுகின்றான்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸியாம், பாப் ஃபஸ்ல் ஷஹ்ர் ரமலான், ஹதீஹ் எண் 2495)

இதிலிருந்தும் நம்பிக்கையாளர்களே பயனடைகின்றனர். மேலும் எவர்கள் சரியான முறையில் நம்பிக்கை கொண்டுள்ளார்களோ மேலும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப செயல்படக்கூடியவர்களே இதிலிருந்து பயனடைவர். ஷய்த்தானின் அடிச்சுவட்டில் செல்பவர்கள் இன்றைய நாட்களிலும் தமது செயல்களிலிருந்து வெளி வருவதில்லை. உலகத்தில் எண்ணிலடங்கா தீமைகள் இருக்கின்றன. மேலும் ஒழுக்கமின்மையானது அன்றாடம் நடக்கக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. ரமலானில் இரு ஒன்றும் முடிந்து விடவில்லை.

ஆக இந்த நற்செய்தி நம்பிக்கையாளர்களுக்கும், இறையச்சத்தின்படி நடக்கக் கூடியவர்களுக்கும், மேலும் அல்லாஹ்வின் கருணையிலிருந்து பங்கு பெறக் கூடியவர்களுக்கும் உரியதாகும். அதாவது உங்களுக்காக அல்லாஹ் தனது கருணையை முன்பை விட அதிகமாக விரிவாக்கியுள்ளான். ஆகவே இதிலிருந்து பயனடையுங்கள். மேலும் அல்லாஹ்விற்குரிய உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். அவனது கட்டளைகளின்படி நடக்க முயற்சி செய்யுங்கள். உரிமைகளை செலுத்துவது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்.

எவர் ஒருவர் ஈமானின் எதிர்பார்ப்பையும், நற்கூலியையும் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் ரமலான் மாதத்தில் இரவில் எழுந்து தொழுவாரோ அவருடைய முந்தைய அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படுகின்றது.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஈமான், பாப் ஸைம் ரமலான் இஹ்தஹா பா மினல் ஈமான் ஹதீஹ் எண் 38)

ஆக ஒருபுறம் அல்லாஹ்வின் கருணையின் பரந்த தன்மை வெளிப்படுகின்றது. இன்னொரு புறம் அல்லாஹ், நீங்கள் முயற்சி செய்தால் நான் பல மடங்கு அதிகமாக்கித் தருவேன் என்று கூறுகின்றான். எந்த வகையிலெல்லாம் அவனது ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத் மற்றும் ரஹ்மத்தின் பண்புகள் வெளிப்படுகின்றது! ஆக நற்பேறு பெற்றவர் யார் என்றால், இன்றைய நாட்களிலிருந்து பயன் பெறுபவரே ஆவார்.

மேலும் இதுவும் அவனது கொடையாக இருக்கின்றது. அதாவது முன்பை விட அதிகமாக துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதன் காட்சியை நாம் பார்க்க வேண்டும் என்பதற்காக இந்த இறுதி நாளில் லைலத்துல் கதரை தேடுவதன் பக்கமும் அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளான். இதுவும் நமது எந்தவொரு உரிமையும் அல்ல. அடியார்களை தனது அருகில் கொண்டு வர வேண்டும் என்பதற்காக இதுவும் அவனால் வழங்கப்பட்டதே ஆகும். மேலும் இது அவனது பரந்து விரிந்த கருணையாகும்.

ஒரு ஹதீஸில் வருகின்றது. அதாவது ரமலானின் முதல் பத்து கருணையின் நாட்களாகும். இரண்டாவது பத்து மஃபிரத்தின் நாட்களாகும். மூன்றாம் பத்து நெருப்பிலிருந்து இரட்சிப்பிற்குரிய நாட்களாகும்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 8 பக்கம் 463 ஹதீஸ் எண் 23668 – 1985 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

ரமலானில் மனிதன் நோன்பு வைத்து முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் கட்டளைகளை பேணி நடந்தால், மேலும் இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்தினால், இறையச்சத்தில் முன்னேறினால் அவன் அல்லாஹ்வின் கருணை என்ற விரிப்பில் முன்பை விட அதிகமாக வருகின்றான்.

ஏனென்றால், அல்லாஹ் கூறுகின்றான். எனது அடியான் எனக்காக நோன்பு வைக்கின்றான். இன்றைய நாட்களில் எனக்காக அவன் சில ஆகுமான விஷயங்களை செய்வதிலிருந்தும் தவிர்ந்திருக்கின்றான். அப்படிப்பட்ட நோன்பாளிக்கு கூலியாக நானே ஆகிவிடுகின்றேன்.

(சஹீஹ் புகாரி, கிதாப் ஸைம் ஹதீஸ் எண் 1904)

ஆக அல்லாஹ் தானே கூலியாக ஆகிவிட்டால் மஃபிரத்திற்கான ஏற்பாடும் ஆகிவிட்டது. மஃபிரத்திற்கான ஏற்பாடும் ஆகிவிட்டால் அல்லாஹ் மன்னிக்கவும், தவ்பாவை ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றான். இதன் மூலமாக நெருப்பிலிருந்தும் அவன் இரட்சிப்பை பெறுகின்றான். மேலும் அவன் இவ்வுலக மற்றும் மறுவுலக நெருப்பிலிருந்தும் தப்பித்து விடுகின்றான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், கலப்பற்ற தன்மையுடன் அல்லாஹ்விற்காக நோன்பு நோற்க வேண்டும். மேலும் அதன்படி அமல் செய்ய வேண்டும். இவ்வாறு இந்த செயலானது வாழ்க்கையில் நிரந்தரமாக ஓர் அங்கமாக ஆகி அல்லாஹ்வின் கருணையில் நிரந்தரமாக நம்மை சூழ்ந்திருப்பதற்கான ஒரு வழியாக ஆகிவிடுகின்றது.

அல்லாஹ்வின் கருணை வெறும் ரமலானின் முதல் பத்து நாட்களுக்கு மட்டும் உரியதல்ல. மாறாக, முதல் பத்திலிருந்து இரண்டாவது பத்திற்கும், பிறகு மூன்றாவது பத்திலும் அது நுழைகின்றது. எப்போது வரை அவனது செயல்கள் இறையச்சத்தின்படியும், ஈமானில் வலுவாகவும் இருக்குமோ அப்போது வரை அது நிரந்தரமாக மனிதனோடு இருக்கின்றது.

அவ்வாறே அவனுடைய மக்ஃபிரத் நடுப்பத்தில் மட்டும் கிடையாது. மாறாக, ரமலானின் இறுதி வரை இன்னும் சொல்வதென்றால், அதைவிட அதிகமாக மனிதனோடு இருக்கின்றது. மேலும் எப்போது வரை மனிதனுடைய வாழ்க்கை இருக்குமோ அப்போது வரை அது அவனோடு இருக்கின்றது. மேலும் அது அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து அவனை பாதுகாக்கக்கூடியதாக இருக்கின்றது.

அவ்வாறே இந்த பத்து நாட்களுக்கு மட்டும் மனிதன் இந்த நெருப்பிலிருந்து தப்பிக்கவில்லை. மாறாக, அல்லாஹ்வின் கருணையிலிருந்து பயன் பெற்றவாறு அல்லாஹ்விடம் மக்ஃபிரத்தை வேண்டியவாறு ரமலானை கழித்து விட்டாலும் அதற்குப் பிறகும் கூட நெருப்பிலிருந்து அவர் தூரமாகவே இருப்பார்.

இவ்வாறில்லாமல் நாம் ரமலானிற்குப் பிறகு அதே உலக சுகபோகங்களிலும், இறையச்சத்திலிருந்து தூரமாகவும், அல்லாஹ்வின் கட்டளைகளை பேணுவதில் கவனமற்றவர்களாகவும், ஈமானில் பலகீனமாவர்களாகவும், அல்லாஹ்வின் அடையாளங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமலும் இருந்தால் அது எப்படிபட்டதாக இருக்கும் என்றால் ஒரு மனிதன் தனக்காக ஒரு பாதுகாப்பான கோட்டையை கட்டி விட்டு தானே அதனை உடைக்கவும், பாதுகாப்பற்றதாக ஆக்குவதாகவுமே இருக்கும்.

ஆக இந்த ரமலானை அல்லாஹ்வின் கருணையிலிருந்து பங்கு பெறவும், மேலும் முன்பை விட அதிகமாக பங்கு பெறவுமே ஒரு வழியாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்காக ஒரு வழியை அல்லாஹ் உருவாக்கியுள்ளான். அவ்வாறில்லாமல், அல்லாஹ்வின் கருணையானது ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் உட்பட்டதல்ல. அவ்வாறே அவனது மக்ஃபிரத்தும் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் உட்பட்டதல்ல. அவ்வாறே அவனது மக்ஃபிரத் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் காரணமாக நெருப்பிலிருந்து இரட்சிப்பை பெறுவதும் சில நாட்களுக்கோ அல்லது சில காலங்களுக்கோ மட்டும் உட்பட்டதல்ல.

எனவே இந்த விஷயத்தை நாம் எப்போதும் நினைவு கூர்ந்து கொண்டே இருக்க வேண்டும். நாம் எவ்வாறு அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற முடியும்? அதன் உண்மைத்துவம் என்ன? எவ்வாறு நாம் அல்லாஹ்வின் கருணையிலிருந்து பங்கு பெறக் கூடியவர்களாக ஆக முடியும்? எவ்வாறு அல்லாஹ் தன் கருணையின் விரிப்பை நம்மீது போர்த்துவதற்கான ஏற்பாட்டைச் செய்கின்றான்? அல்லது எவ்வாறு நமது ஒரு செயலின் காரணமாக அதற்கு பகரமாக அவன் அதிகப்படுத்தி தருகின்றான்? எவ்வாறு மஃபிரத்திற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றான்? அவனது கருணையானது நிரந்தரமாக நம்முடன் இருக்க வேண்டும் என்றால் எவ்வாறு நாம் மக்ஃபிரத்திற்கான முயற்சிகளை மேற்கொள்வது? ஆகிய விஷயங்கள் தொடர்பாக இந்த காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒவ்வொரு அடியிலும் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

எனவே இதற்காக நான் இது தொடர்பாக சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். விரிவாகவும் கூறுவேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நான் மேலே ஓதிய வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

நாம் யாருக்கு விரும்புகின்றோமோ அவருக்கு தண்டனையை வழங்குகின்றோம். என் கருணையானது எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது என்று அல்லாஹ் கூறுகின்றான்.

ஆக எவர்கள் எல்லா விதமான இணை வைத்தலிலிருந்தும், நிரகாரிப்பிலிருந்தும், ஒழுக்கக் கேடான செயல்களிலிருந்தும் விலகி இருக்கின்றார்களோ மேலும் ஸக்காத் கொடுக்கின்றார்களோ, மேலும் எவர்கள் நமது அடையாளங்கள் மீது முழுமையான நம்பிக்கை கொள்கின்றார்களோ அவர்கள் மீது எனது கருணையை எழுதுவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 4, ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 564)

தக்வாவிற்கு விளக்கமளித்தவாறு மூன்று சொற்களில் அவற்றை அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது இணை வைப்பதிலிருந்து விலகி இருப்பது, நிராகரிப்பிலிருந்து பாதுகாப்பாக இருப்பது மேலும் ஒழுக்கக் கேடான செயல்களிலிருந்து விலகி இருப்பது போன்றவை ஆகும்.

இன்றைய நாட்களில் ஒவ்வொரு அடியிலும் டிவி, இன்டர்நெட் மற்றும் மீடியாவில் ஒழுக்கக்கேடான செயல்கள், வீணான காரியங்கள் போன்றவை இருக்கின்றன. எனவே இவர்களுடைய வீணான நிகழ்ச்சிகளிலிருந்து தவிர்ந்திருப்பதும், அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பதற்கு காரணியாக அமைகின்றது. ரமலானின் இன்றைய நாட்களில் நோன்பு வைப்பதற்காக முன்கூட்டியே எழ வேண்டியதிருக்கின்றது. இதர பணிகளும் இருக்கின்றன. எனவே பல மக்கள் இன்றைய நாட்களில் இந்த நிகழ்ச்சிகளை பார்ப்பதில்லை. அல்லது இந்த வீணானவற்றில் அவர்கள் ஈடுபடுவதில்லை. அல்லது இதிலிருந்து தவிர்ந்திருக்கின்றார்கள். ஆகவே நிரந்தரமாக இதிலிருந்து தவிர்ந்திருப்பது அவசியமாகும்.

இந்த விஷயங்கள் தொடர்பாக இன்றைய நாட்களில் குறிப்பாக இளைஞர்கள் மாறாக, பெரியவர்கள் மீதும் ஆட்சேபனை வருகின்றது. அதாவது இந்த நிகழ்ச்சிகள் அவர்களது மூளையில் விஷத்தை நிரப்பியுள்ளது. ஒழுக்க நிலையும் பாழாகின்றது. ஈமானிலிருந்தும் அவர்கள் விலகிச் செல்கின்றனர். ஆக இதன் பக்கம் அஹ்மதிகள் கவனம் செலுத்தியவாறு முழுமையான முறையில் முயற்சி செய்ய வேண்டும். மேலும் இந்த விஷயங்களையும் அவர்கள் சரியான

முறையில் பயன்படுத்த வேண்டும். ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், கருணையானது பொதுவானதும், பரந்து விரிந்ததும் ஆகும். மேலும் கோபம் அதாவது நீதி என்ற பண்பானது ஏதாவதொரு சிறப்புத்தன்மையின் காரணமாக உருவாகின்றது. அதனால் இந்த பண்பு இறைவனது சட்டத்தை குறித்து ஆலோசித்தப் பிறகு உருவாகின்றது. எனவே அல்லாஹ் எவருக்காவது தண்டனை வழங்குகின்றான் என்றால் அவன் அல்லாஹ்வின் சட்டத்திற்கு வெளியே செல்வதனால் வருகின்றது. நான் கூறியதற்கிணங்க தண்டனையும் கூட சீர்திருத்தத்திற்காகவே கொடுக்கப்படுகின்றது. பிறகு இறுதியாக இறைவனது கருணையானது வெற்றி கொள்கின்றது.

(ஜன்கே முகத்தஸ், ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 207)

நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் மீதாவது அல்லாஹ்வின் தண்டனை இறங்குகின்றது என்றால் அவர் அல்லாஹ்வின் சட்டத்திற்கு வெளியே சென்றதனால் வருகிறது. அவ்வாறிருந்தும் கூட அல்லாஹ் தனது கருணையை பரந்து விரியச் செய்துள்ளான். பிறகும் கூட அவனது கோபத்திற்கு ஆளாகின்றார்கள்.

இதற்கு மேலும் விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தண்டனை கொடுப்பது என்பதில் எந்தவொரு வாக்குறுதியும் கிடையாது. மாறாக, இறைவன் தனது பரிசுத்த தன்மையின் காரணமாக அவனது எதிர்பார்ப்பானது குற்றம் இழைத்த மனிதருக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்பதாக இருக்கின்றது. பிறகு குற்றமிழைத்த அந்த நபர் தவ்பா, இஸ்திஃபார் மற்றும் மன்றாடுதல் ஆகிய எதிர்பார்ப்புகளை முழுமை செய்யும் போது கருணையின் எதிர்பார்ப்பானது இறைவனது கோபத்தை முந்தி விடுகின்றது. மேலும் அந்த கோபத்தை தனக்குள்ளே இருந்து அழித்து விடுகின்றது.

عَذَابِيٓ أُصِيبُ بِهٖ مَنۡ أَشَآءُ وَرَحۡمَتِي وَسِعَتۡ كُلَّ شَيۡءٍ

இந்த வசனத்திற்கும் இந்த பொருள் தான். அதாவது رَحۡمَتِي سَبَقَتۡ غَضَبِي என் கருணையானது என் கோபத்தை விட முந்தி விட்டது. மனிதன் தவ்பா, இஸ்திஃபார் செய்கின்றான். மேலும் மன்றாடுகின்றான். மேலும் துஆ கேட்கின்றான். மேலும் அதன் எதிர்பார்ப்பை அவன் முழுமை செய்கின்றான். மேலும் அதன் உரிமையை அவன் பூர்த்தி செய்கின்றான்.

(தொஹ்ஃபா கஸ்னவிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 537)

அல்லாஹ் தண்டனை கொடுக்க வேண்டும் என்று தன்மீது அவன் எதையும் கடமையாக்கவில்லை. மாறாக, அவன் இப்படிப்பட்ட மக்கள் மீது தனது கருணையை பொழிவதையே அவன் கடமையாக்கியுள்ளான். பிறகு அவனது கருணையானது அவனது கோபம் என்ற எதிர்பார்ப்பை மிகைத்து விடுகின்றது. பிறகு கோபம் மறைந்து விடுகின்றது. மேலும் அது திரையில் மறைந்து கொள்கின்றது.

பிறகு அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பதற்கு ஒரு வழி தவ்பா மற்றும் இஸ்திஃபார் ஆகும். இது தொடர்பாக இஸ்திஃபாரின் உண்மைத்துவம் என்ன? அதன் பொருள் என்ன? அன்னார் கூறுகின்றார்கள்:

இஸ்திஃபாரின் உண்மையான பொருள் என்னவென்றால்,

இறைவனிடம் விண்ணப்பிப்பது ஆகும். அதாவது மனிதன் என்ற முறையில் என்னிடமிருந்து எந்த பலகீனமும் வெளிப்பட்டுவிடக்கூடாது. மேலும் இறைவா! உனது ஆற்றலின் மூலமாக எனது இயல்பிற்கு துணை புரிவாயாக. மேலும் உனது உதவியின் வட்டத்திற்குள் என்னை எடுத்துக் கொள்வாயாக.

ஆக இஸ்திஃபார் ஏன் என்றால், மனிதன் பலகீனமாக இருப்பதால், மனிதனிடம் இருக்கின்ற ஏதாவதொரு பலகீனம் வெளிப்படக்கூடாது. மேலும் அல்லாஹ் தனது ஆற்றலின் மூலமாக மனித இயல்பிற்கு உதவி புரிய வேண்டும். மேலும் குற்றங்கள் நிகழாமல் இருக்க பாதுகாக்க வேண்டும். தவறுகள் நடக்காமல் இருக்க பாதுகாக்க வேண்டும்.

கூறினார்கள்: இந்த சொல் கஃபர் என்பதிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. அதாவது மூடுவதற்கு அது கூறப்படும். ஆக இதன் பொருள், இறைவன் தனது ஆற்றல்களுடன் மனிதனது அடிப்படையான இயல்பாக இருக்கின்ற பலகீனங்களை மூட வேண்டும். அதாவது இஸ்திஃபார் செய்யக்கூடிய மனிதர், அவரிடம் மனித பலகீனங்கள் இருக்கின்றன. மனித இயல்பில் அதிகமான பலகீனங்கள் இருக்கின்றன. அவற்றை மூட வேண்டும். அது வெளிப்பட்டுவிடக்கூடாது. மேலும் இந்த பலகீனங்களின் காரணமாக அவனிடமிருந்து குற்றங்கள் ஏற்பட்டு விடக்கூடாது என்று பொருள் கொள்ளப்படும்.

ஆனால் சாதாரண மக்களுக்கு இந்த சொல்லிற்கான பொருள் மேலும் பரந்ததாக ஆக்கப்பட்டுள்ளது. வெளிப்பட்டுள்ள குற்றங்களையும் இறைவன் மூடி மறைக்க வேண்டும் என்ற பொருளும் கொடுக்கப்படுகின்றது. அதாவது மனிதன் எந்த குற்றங்களை செய்துள்ளானோ அதனையும் அல்லாஹ் மூட வேண்டும். அதன் தீய விளைவுகளிலிருந்து பாதுகாப்பாயாக. அந்த குற்றத்தினால் கிடைக்கக்கூடிய தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக என்று துஆ செய்வதாகும்.

ஆனால் இதன் உண்மையான பொருள் இதுவாகும். அதாவது, இறைவன் தனது ஆற்றலின் மூலமாக இஸ்திஃபார் செய்யக்கூடிய நபரின் இயல்பிலுள்ள பலகீனங்களிலிருந்து காப்பாற்ற வேண்டும். மேலும் தனது ஆற்றல் மூலமாக ஆற்றலை வழங்க வேண்டும். மேலும் தனது அறிவின் மூலமாக அறிவை வழங்க வேண்டும். மேலும் தனது ஒளியின் மூலமாக ஒளியை வழங்க வேண்டும். ஏனென்றால் மனிதனை படைத்து விட்டு அவன் தனித்து சென்றுவிடவில்லை. மாறாக, அவன் எவ்வாறு மனிதனை படைக்கக்கூடியவனாக இருக்கின்றானோ, மேலும் அவனது அனைத்து உட்புற மற்றும் வெளிப்புற ஆற்றல்களை உருவாக்கக்கூடியவனாக இருக்கின்றானோ அவ்வாறே அவன் மனிதனை நிலைத்திருக்கச் செய்யக் கூடியவனாகவும் இருக்கின்றான்.

அதாவது அவன் எவற்றையெல்லாம் படைத்தானோ அதனை தனது குறிப்பான ஆற்றல்கள் மூலம் பாதுகாக்கக் கூடியவனாக இருக்கின்றான். ஆக இறைவனது பெயர் கய்யூம் என்பதாகும். அதாவது தனது ஆற்றலின் மூலமாக படைப்பினங்களை நிலைத்திருக்கச் செய்யக்கூடியவனாக அவன் இருக்கின்றான்.

(அஸ்மத்தே அன்பியா, ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 671)

அல்லாஹ் படைத்து விட்டு மனிதனை விட்டுவிடவில்லை. அவன் நிலைத்திருக்கச் செய்யக்கூடியவனாக இருக்கின்றான். எவ்வித சந்தேகமுமின்றி மனிதனை அல்லாஹ் படைக்கின்றான். மேலும் அவனது கட்டளையினால் மனிதனது பிறப்பு நிகழ்கின்றது தான். ஆனால் இயற்கை சட்டத்திற்கேற்ப மனித முயற்சிகள் மூலமாக அல்லாஹ் உருவாக்கியுள்ள வழிமுறைகள் மூலமாக மனித பிறப்பானது அவற்றை கடக்க நேரிடுகின்றது. இது மிகவும் அவசியமாகும்.

அன்னார் கூறினார்கள்: மனித பிறப்பில் மனிதன் செய்கின்ற முயற்சிகளின் காரணமாக அதற்குப் பிறகு அல்லாஹ் அதற்கான விளைவுகளையும் உருவாக்குகின்றான்.

எனவே அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படுவதற்கு அவனுடைய கய்யூமிய்யத் என்ற பண்பானது உங்களிடம் வெளிப்பட வேண்டும். மேலும் அதனை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இது மிகவும் அவசியமாகும்.

மேலும் அவனது கட்டளைகளின்படி நடப்பதற்கு அவனிடம் துஆ செய்ய வேண்டும். மேலும் இஸ்திஃபார் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலமாக அல்லாஹ் தனது கய்யூமிய்யத் என்ற பண்பை பயன்படுத்தியவாறு எப்படிப்பட்ட ஆற்றலை வழங்க வேண்டும் என்றால் அதன் மூலமாக மனிதன் அவனது கட்டளைகளின்படி செயல்படக்கூடியவனாக இருக்க வேண்டும்.

இது தொடர்பாக மேலும் விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

ஆகவே மனிதனுக்கு இது ஓர் இயல்பான அவசியமாக இருந்தது. அதற்காக இஸ்திஃபார் செய்யுமாறு வழிகாட்டப்பட்டுள்ளது. இதன் பக்கமே திருக்குர்ஆனில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ اَلۡحَيُّ الۡقَيُّوۡمُ

அதாவது அந்த இறைவன் படைக்கக்கூடியவன் ஆவான். மேலும் கய்யூமாகவும் இருக்கின்றான். மனிதன் பிறந்த பிறகு ஹாலிகிய்யத் அதாவது படைக்கப்பட்ட வேலை முழுமையடைந்து விட்டது. ஆனால்

கய்யூமிய்யத் என்ற பணி நிரந்தரமான பணியாகும். மனிதன் பிறந்து விட்டான். அல்லாஹ்வின் பண்பான ஹாலிகிய்யத்தின் பணி முழுமையடைந்து விட்டது. ஆனால் கய்யூமிய்யத்தின் பணி எப்போது வரை மனிதனின் வாழ்நாள் இருக்குமோ அந்த நேரம் வரை அது அவனுடன் இருக்கின்றது. எனவே தான் நிரந்தரமான இஸ்திஃபாரின் தேவை ஏற்படுகின்றது.

எப்போதும் அவனது கய்யூமிய்யத் என்ற பண்பை பெறுவதற்காக நிரந்தரமாக இஸ்திஃபார் செய்ய வேண்டியது அவசியமாகும். ஆக இறைவனது ஒவ்வொரு பண்பிற்கும் ஒரு அருள் இருக்கின்றது. மேலும் இஸ்திஃபாரானது கய்யூமிய்யத் என்ற பண்பிலிருந்து பயன் பெறுவதற்காகவே ஆகும். அல்லாஹ்வின் பண்பான கய்யூமிய்யத்திலிருந்து அருளை பெற வேண்டுமென்றால் பிறகு இஸ்திஃபார் செய்யுங்கள். இதன் மூலமாக அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள ஆற்றல்களை அல்லாஹ் தனது விருப்பத்திற்கேற்ப அவர்களை வழிநடத்துவதற்காக இஸ்திஃபார் செய்ய வேண்டும்.

கூறினார்கள்: சூரா ஃபாத்திஹாவின் வசனமான إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ என்ற வசனமும் இதன் பக்கமே சுட்டிக் காட்டுகின்றது. அதாவது நாங்கள் உன்னையே வணங்குகின்றோம். மேலும் உன்னிடமே இதற்கான உதவியையும் தேடுகின்றோம்.

அதாவது உன்னுடைய கய்யூமிய்யத் மற்றும் ரபூபிய்யத் என்ற பண்பின் மூலமாக எங்களுக்கு உதவி கிடைக்க வேண்டும். மேலும் தடுமாற்றத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். அவ்வாறின்றி எங்களது பலகீனங்கள் வெளிப்பட்டு விடக்கூடாது. மேலும் நாங்கள் இறை வணக்கம் செய்ய இயலாதவர்களாக ஆகி விடக்கூடாது.

(அஸ்மத்தே அன்பியா, ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 672)

ஆக இந்த அடிப்படையான விஷயத்தை நாம் நம்முன் வைக்க வேண்டும். அல்லாஹ், என் கருணையானது எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது என்று கூறுகின்றான். எனவே எதை வேண்டுமானாலும் செய்து விட்டு பிறகு அல்லாஹ்விடம் அவனது கருணையையும், மன்னிப்பையும் வேண்டிக் கொள்ளலாம் என்று மட்டும் கூறுவது சரியானது முறையல்ல.

அல்லாஹ் தனது கருணையை தன் பக்கம் வருபவர்களுக்காகவும், அவனிடம் மக்ஃபிரத்தை வேண்டுபவர்களுக்கும், மேலும் அவனது கட்டளையின்படி செயல்படுபவர்களுக்காகவும் தான் தன்மீது கடமையாக்கியுள்ளான்.

இஸ்திஃபார் தொடர்பாக மேலும் விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

சில மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால் அவர்கள் பாவம் தொடர்பாக அறிந்தவர்களாக இருக்கின்றனர். மேலும் சிலர் பாவங்களைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் பாவங்கள் புரிந்த பிறகும் கூட அதனை அவர்கள் உணர்வதே இல்லை. மனிதன் சில நேரங்களில் தவறுதலாகவும் பாவங்களை செய்து விடுகின்றான். அல்லது பாவங்கள் செய்ததே அவனுக்கு தெரியாமல் இருக்கின்றது.

எனவே தான் அல்லாஹ் எப்போதும் இஸ்திஃபார் செய்ய வேண்டும் என்பதை விதித்து விட்டான். அதாவது மனிதன் ஒவ்வொரு பாவத்திற்கும் அது வெளிப்படையாகவோ அல்லது உட்புறமாகவோ நடந்தாலும் அல்லது அதனைப் பற்றிய அறிவு அவனுக்கு இருந்தாலும் இல்லையென்றாலும், மேலும் கை, கால்கள், நாக்கு, மூக்கு, காது மற்றும் கண் மற்றும் எல்லா விதமான குற்றங்கள் செய்வதிலிருந்தும் அவன் இஸ்திஃபார் செய்ய வேண்டும். உடலில் எத்தனை உறுப்புகள் உள்ளனவோ அவற்றில் எதிலிருந்தும் பாவம் நிகழ்ந்து விடக்கூடாது. இஸ்திஃபார் செய்து வாருங்கள்.

கூறினார்கள்: இன்றைய நாட்களில் ஆதம் (அலை) அவர்களின் துஆவை படிக்க வேண்டும்.

رَبَّنَا ظَلَمْنَا أَنفُسَنَا وَإِن لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ

அதாவது இறைவா! நான் என் ஆன்மா மீது அநீதி இழைத்து விட்டேன். நீ எங்களை மன்னிக்காவிட்டால் எங்கள் மீது கருணை காட்டவில்லை என்றால் நிச்சயமாக நாங்கள் இழப்பிற்குரியவர்களை சார்ந்தவர்களாகி விடுவோம். (7:124)

இந்த துஆவைப் பற்றி அன்னார் இது ஆரம்ப நாட்களிலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்று கூறினார்கள்.

மேலும் கூறினார்கள்: கவனமற்றவர்களாக வாழ்க்கையை கழிக்காதீர்கள். எவர் கவனமற்ற வாழ்க்கையை கழிப்பதில்லையோ அவர் ஏதாவதொரு மிகப்பெரிய சக்திக்கு அப்பாற்பட்ட துன்பத்தில் சிக்கிக் கொள்வார் என்று நம்மால் நம்ப இயலாது. எந்தவொரு கஷ்டமும் எவ்வித இறைகட்டளையுமின்றி வருவதில்லை.

அன்னார் கூறினார்கள்: எனக்கு இந்த துஆ இல்ஹாமாக வந்துள்ளது.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِي وَانْصُرْنِي وَارْحَمْنِي

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 275,276, 1985 ஆம் ஆண்டு பதிப்பு, இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவதற்காகவும் அவனது உதவி மற்றும் அவனது கருணையை பெறுவதற்காக முயற்சி, இஸ்திஃபார் மற்றும் துஆக்கள் செய்வது அவசியமாகும்.

தவ்பா மற்றும் இஸ்திஃபார் என்று நாம் இரு சொற்களை பயன்படுத்துகின்றோம். இதன் வித்தியாசத்தை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

இஸ்திஃபார் மற்றும் தவ்பா இரண்டு விஷயங்களாகும். ஒரு காரணத்தினால் இஸ்திஃபாருக்கு தவ்பாவை விட முன்னுரிமை இருக்கின்றது. அது முதன்மையானதாக இருக்கின்றது. ஏனென்றால் தவ்பாவிற்கு முன்னால் இஸ்திஃபார் இருக்கின்றது. ஏனென்றால் இஸ்திஃபார் மூலமாக இறைவனிடமிருந்து உதவி மற்றும் ஆற்றல் கிடைக்கின்றது. அல்லாஹ்விடம் இஸ்திஃபார் செய்வதன் மூலமாக தீமைகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கான உதவியும் ஆற்றலும் கிடைக்கின்றது. இதன் மூலமாக மனிதன் குற்றங்கள் செய்வதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும்.

மேலும் தவ்பா தனது கால்களில் நிற்பதாகும். அதாவது தீமைகள் செய்வதிலிருந்து தப்பித்த பிறகு நிரந்தர மனப்பான்மையுடன் அதில் நிலைத்திருப்பதற்காக செய்யப்படுகின்றது.

குற்றங்கள் செய்வதிலிருந்து தவிர்ந்திருப்பதற்காக நாம் எந்த இஸ்திஃபாரை செய்தோமோ மேலும் அல்லாஹ்விடம் துஆவை வேண்டினோமோ அதில் நிலைத்திருப்பதற்காகவே தவ்பா செய்யப்படுகின்றது. ஆக தவ்பா என்பது துஆ ஆகும்.

அல்லாஹ்வே! மக்ஃபிரத்தை வேண்டி நாங்கள் செய்த துஆக்களில் எங்களை நிலைத்திருக்கச் செய்வாயாக. நெருப்பிலிருந்து நீ வழங்கிய இரட்சிப்பானது நிரந்தர இரட்சிப்பாக இருக்கட்டுமாக. எங்களது எந்த செயலும் அல்லது நாங்கள் செய்த இந்த எல்லா முயற்சியும் நாங்கள் மீண்டும் அதே இடத்திற்கு வந்து விடும் வகையில் அது உனது கோபத்திற்கு காரணியாக அமைந்து விடக்கூடாது.

பாவங்களிலிருந்து மன்னிப்பை வேண்ட வ அதூபு இலைஹி என்று அல்லாஹ் கூறியுள்ளான். மேலும் இதில் எங்களை நிலைத்திருக்கவும் செய்வாயாக. மேலும் நாங்கள் பாவங்களிலிருந்து தவிர்ந்தும் இருக்க வேண்டும் மேலும் உங்களது மஃபிரத்தை எப்போதும் பெறக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும் நெருப்பிலிருந்து எங்களை எப்போதும் இரட்சிப்பும் கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

கூறினார்கள்: இறைவனது நடைமுறை இதுவேயாகும். அதாவது எப்போது அல்லாஹ்விடம் உதவியை விரும்பினாலும் இறைவன் ஒரு ஆற்றலை வழங்கி விடுகின்றான். பிறகு இந்த ஆற்றலுக்குப் பிறகு மனிதன் தனது கால்களில் நின்று விடுகின்றான். பிறகு நன்மைகளை செய்வதற்கு அவனிடம் ஓர் ஆற்றல் உருவாகின்றது. இதன் பெயர் தூபூ இலைஹி ஆகும்.

கூறினார்கள்: தவ்பா செய்வதற்கான வாய்ப்பு இஸ்திஃபார் செய்த பிறகு கிடைக்கின்றது. நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். இஸ்திஃபார் இல்லையென்றால் தவ்பாவின் ஆற்றல் மரணித்து விடுகின்றது. ஆனால் இஸ்திஃபாருக்கு பிறகு தவ்பா செய்தால் அதன் விளைவாக يُمَتِّعْكُم مَّتَاعًا حَسَنًا إِلَىٰ أَجَلٍ مُّسَمًّى அதாவது அல்லாஹ் ஒரு குறிப்பிட்ட காலம் வரை உங்களுக்கு ஒரு சிறந்த ஏற்பாட்டைச் செய்வான் என்று கூறுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவனது நடைமுறை இவ்வாறே இருந்து வந்துள்ளது. அதாவது இஸ்திஃபார் மற்றும் தவ்பா செய்வீர்களாயின் உங்களுடைய படித்தரத்தை நீங்கள் அடைந்து விடுவீர்கள். ஒவ்வொரு புலனுக்கும் ஒரு எல்லை இருக்கின்றது. அதில் அவன் உயர்வான முன்னேற்றத்தை அடைகின்றான். ஒவ்வொரு மனிதனும் நபியாகவோ, ரஸூலாகவோ, சித்தீக்காகவோ, ஷஹீதாகவோ

ஆவதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 68,69, 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆனால் எந்தவொரு இடத்தை ஒருவர் அடைய வேண்டுமென்றாலும், அதனை அடைவதற்காக முயற்சிகளை செய்ய வேண்டியது வரும். மேலும் அது இஸ்திஃபார் மற்றும் தவ்பாவின் மூலமே நடைபெறும்.

மேலும் தவ்பா பற்றி மேலும் விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

நினைவில் கொள்ளுங்கள். தவ்பா அரபு அகராதியில் திரும்புதல் என்று கூறப்படும். இதன் விளைவாகவே திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் பெயரும் தவ்வாப் ஆகும். அதாவது அதிகமாக திரும்பக்கூடியவன். இதன் பொருள் இவ்வாறு வரும். அதாவது எப்போது மனிதன் தான் செய்த தவறிலிருந்து விலகி உண்மையான உள்ளத்துடன் இறைவன் முன் திரும்பும்போது இறைவன் அதை விட அதிகமாக அவன் பக்கம் திரும்புன்றான். இது முழுக்க முழுக்க இறை சட்டத்திற்குட்பட்டதே ஆகும்.

ஏனென்றால், அல்லாஹ் மனித இயல்பில், ஒரு மனிதன் உண்மையான உள்ளத்துடன் மற்ற மனிதன் பக்கம் முன்னால் திரும்பும் போது அவனது உள்ளம் கூட அவனுக்காக மென்மையாகி விடுகின்றது என்ற விஷயத்தை வைத்துள்ளான். அவ்வாறிருக்கும் போது மனிதன் உண்மையான உள்ளத்துடன் இறைவன் முன்னிலையில் திரும்பும் போது இறைவன் அவன் பக்கம் திரும்ப மாட்டானா? இவ்விஷயத்தை அறிவு எங்கனம் ஏற்றுக் கொள்ளும்?

மாறாக, மிகவும் கருணையாளனான இறைவன் அடியார்களை விட அதிகமாக அவன் பக்கம் திரும்புகின்றான். அதனால் திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் பெயர் தவ்வாப் என்று வந்துள்ளது. அதாவது அதிகமாக திரும்பக்கூடியவன். ஆக அடியார்கள் திரும்புவது எ ன்பது தனது பணிவு மற்றும் குற்றத்தை ஒப்புத் கொள்வதற்காகவும் இருக்கின்றது. ஆனால் இறைவன் திரும்புவது என்பது அவனது கருணை மற்றும் மக்ஃபிரத்தை வழங்குவதற்காக இருக்கின்றது. கருணை இறைவனுடைய பண்பாக இல்லாமல் இருந்திருந்தால் எந்தவொரு நபரும் பரிசுத்தமாகியிருக்க மாட்டார்.

கூறினார்கள்: வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இந்த மக்கள் இறைவனது பண்புகளை சிந்தித்துப் பார்க்கவில்லை. எவர்கள் நாம் நமது செயல்களின் விளைவாகவே அனைத்தையும் பெறுவோம் என்று கருதுகின்றாரோ அவர்கள் அனைத்து நம்பிக்கையையும் தனது முயற்சி மற்றும் செயல்களிலேயே வைத்துள்ளார்கள். ஆனால் எந்தவொரு செயலையும் செய்யாமல் ஆயிரக்கணக்கான அருட்கொடைகளை வழங்கக்கூடிய மனிதர்களுக்காக பூமியில் உருவாக்கியுள்ள அந்த இறைவனது பண்பாக இது இருக்க முடியுமா? அதாவது பலகீனமான மனிதன் தனது கவனமற்ற நிலையிலிருந்து விழித்தெழுந்து அவன் பக்கம் திரும்புகின்றான். மேலும் அந்த திரும்புதலும் கூட எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால், அவன் மரணமடைந்தவனைப் போன்று ஆகி விடுகின்றான். மேலும் தூய்மையற்ற ஆடையை தமது உடலிலிருந்து அகற்றி விடுகின்றான். அவன் மீது கொண்டுள்ள அன்பில் எரிந்து விடுகின்றான். அவ்வாறிருந்தும் கூட இறைவன் அவன் பக்கம் கருணையோடு திரும்பிப் பார்க்க மாட்டானா என்ன? இதன் பெயர் தான் இறைவனது இயற்கைச் சட்டமா?

(சஷ்மா மஃரூஃபத், ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 133,134)

அல்லாஹ் தன் கருணையை பொழிந்தவாறு தன் அடியார்கள் பக்கம் திரும்புதில்லை என்று கூறுபவர்களுக்கு அன்னார்பதிலளிக்கின்றார்கள். இது மக்களது பார்வையாக இருக்கலாம். இப்படிப்பட்ட மக்கள் பொய் பேசுகின்றனர். لَعْنَةُ اللّٰهِ عَلَى الْكَاذِبِيْنَ

அன்னார் கூறினார்கள்: அடியான் தனது உரிமையை செலுத்திய பிறகு இறைவன் அவனுக்கு எதுவும் வழங்காமல் இருப்பது என்பது ஒருபோதும் நடைபெறாது. இது அல்லாஹ்வின் தகுதிக்கே எதிரானதாகும். என் கருணை பரந்ததாகும் என்று கூறுகின்ற அல்லாஹ்வின் அறிவிப்பிற்கு மாற்றமானதாகும். இது அவனுடைய சட்டத்திற்கு மாற்றமானதாகும். நான் கூறியது போன்று என் கருணை பரந்த அளவில் சூழ்ந்துள்ளது என்ற அறிவிப்பிற்கு மாற்றமானதாகும். ஆனால் மனிதன் தனது கடமையை நிறைவேற்றுவது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்றால், எந்த அளவு முயற்சி செய்ய வேண்டுமென்றால், அவன் மரணித்தவனைப் போன்று ஆகிவிட வேண்டும். மனிதன் தன் மீதுள்ள தூய்மையற்ற மற்றும் பாவத்தின் ஆடையை தனது உடலிலிருந்து அகற்ற வேண்டும். அவனது அன்பில் தம்மை எரித்து விட வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: இந்த விஷயங்கள் இருந்தால் அல்லாஹ்வும் மனிதன் கற்பனை செய்து பார்த்திராத வகையில் அவன் பக்கம் திரும்புகின்றான். இந்த விஷயமானது மிகவும் சிந்திக்கத்தக்க விஷயமாகும்.

ஆக, இதுவே மஃபிரத்தை வேண்டுவதற்கான படித்தரமாகும். இந்த படித்தரமானது அடியார்கள் மீது அல்லாஹ்வின் கருணையை பெறுவதற்கு உரிமையாளராக ஆக்குகின்றது. அந்த உரிமையை செலுத்துவதை அல்லாஹ் தன்மீது கடமையாக்கியுள்ளான்.

அன்னார் உண்மையான தவ்பாவின் நிபந்தனைகளையும் கூறியுள்ளார்கள். இதை அடைவதற்கு மனிதன் எப்படி முயற்சி செய்ய வேண்டும்? என்பது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்.

உண்மையான தவ்பாவிற்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன. முதல் விஷயம், நமது மூளையை குழப்பம் நிறைந்த எண்ணங்களை உருவாக்கக்கூடிய விஷயங்களிலிருந்து தூய்மையானதாக வைத்திருக்க வேண்டும். மேலும் எப்போது வரை நீங்கள் இந்த தீமையான விஷயங்களுக்கு வெறுக்கத்தக்க மற்றும் அச்சமூட்டக்கூடிய வகையில் ஒரு வடிவத்தை கொடுக்கவில்லையோ அப்போது வரை இது சாத்தியமற்றதாகும். இதன் பக்கம் உங்களுக்கு கவனம் இருக்குமென்றால், இதற்கு எதிராக உங்களது சிந்தனையில் ஒருவிதமான ஆகுமானதற்ற வடிவத்தை நீங்கள் கொடுக்கவில்லையோ அது வரை இவற்றிலிருந்து நீங்கள் தப்பிப்பது கடினமானதாகும்.

முதல் விஷயம் இவற்றை உங்களது மூளையிலிருந்தே அகற்றி விட வேண்டும். இந்த விஷயங்கள் மூலமாக முயற்சி செய்து இதற்கெதிரான ஒரு வெறுப்பை உங்களது சிந்தனையில் உருவாக்க வேண்டும்.

இரண்டாவது விஷயம், ஏதாவதொரு தவறான வேலையை செய்வது அல்லது தீமையின் பக்கம் கவனம் செல்லும் போது அதற்காக வெட்கப்பட வேண்டும். மனிதனது சிந்தனையில் இது தொடர்பான தீய எண்ணங்கள் வரும் போது உடனே அவர் வெட்கத்தை உணர வேண்டும். இந்த எண்ணமானது அவரது உள்ளத்தில் எழ வேண்டும். அதாவது எந்த தீமையின் பக்கம் நான் செல்கின்றேனோ இது தற்காலிகமானதாகும். இது எனது வாழ்க்கையை அழிக்கக் கூடியதாகும். ஒருநேரத்தில் இவையெல்லாம் அழியக்கூடியவையே. தற்காலிக இன்பதத்தை தரக்கூடியது. அவரது மனசாட்சி இது தவறு; இது சரி என்று கூற வேண்டும்.

இவ்வாறான நிலைமை உருவாகும் போது அன்னார் கூறியது போன்று மெதுமெதுவாக தப்பித்துக் கொள்ள இயலும்.

மூன்றாவது விஷயம், உறுதித் தன்மை இருக்க வேண்டும். அதாவது நான் இந்த தீமையின் பக்கமே செல்ல மாட்டேன் என்ற உறுதியான நிலைபாட்டில் இருக்க வேண்டும். மேலும் அதில் நிலைத்திருப்பதற்காக முழுமையான ஆற்றலை செலவிட வேண்டும். மேலும் துஆவும் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் இந்த தீமைகளும் முடிவு பெறும். மேலும் இதன் இடத்தை நன்மைகள் எடுத்துக் கொள்ளும்.

அன்னார் தூய்மையற்ற ஆடையை களைய வேண்டும் என்று கூறியதன் பொருள் என்னவென்றால், ஒரு முழுமையான முயற்சியை செய்ய வேண்டும். மேலும் அதில் நிலைத்திருக்க வேண்டும். வலுவான எண்ணத்துடன் அவற்றில் நிலைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அல்லாஹ்வின் கருணைக்கு நீங்கள் வாரிசாவீர்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 138,139 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இஸ்திஃபார் மற்றும் தவ்பா ஆகியவற்றின் மூலம் நெருப்பின் தண்டனையிலிருந்து பாதுகாப்பாக இருப்பது தொடர்பாக அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:

தவ்பாவானது மனிதனுக்கு பயன் தராத ஒன்றல்ல. மேலும் இதன் தாக்கம் கியாமத் நாளன்று மட்டும் உரியதல்ல. மாறாக, இதன் மூலமாக மனிதனின் ஆன்மீகமும், பௌதீகமும் சீரடைகின்றது. மேலும் இந்த உலகத்திலும் மற்றும் வரக்கூடிய அதாவது இரண்டு உலகிலும் நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைக்கின்றது. பாருங்கள்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنۡيَا حَسَنَةً وَّفِي الۡاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

அதாவது எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் நிம்மதி மற்றும் சுகத்திற்கான ஏற்பாட்டைச் செய்வாயாக. மேலும் மறுமையிலும் நிம்மதி மற்றும் சுகத்திக்கான ஏற்பாட்டைச் செய்வாயாக. மேலும் எங்களை நெருப்பிலிருந்து காப்பாற்றுவாயாக.

பாருங்கள். உண்மையில் ரப்பனா என்ற சொல்லில் தவ்பாவின் பக்கமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது அவன் இதற்கு முன்பாக உருவாக்கி வைத்திருந்த மேலும் சில ரப்புகளை விட்டு விட்டு இந்த இறைவனின் பக்கம் வந்துள்ளான். மேலும் இந்த வார்த்தை உண்மையான மற்றும் உளப்பூர்வமான முறையில் அல்லாமல் உள்ளத்திலிருந்து வெளிவரவே இயலாது.

ரப்பனா என்று கூறும் போது அது வெறும் நாவளவில் மட்டும் கூறப்படுவதில்லை. மாறாக, இந்த துஆ உள்ளத்திலிருந்து வெளிவருகின்றது. சிலர் வெளிப்படையாகவும் கூறி விடுகின்றனர். ஆனால் உண்மையில் உள்ளத்திலிருந்தே இந்த துஆ வெளிவருகின்றது.

கூறுகின்றார்கள்: ரப் என்றால் உயர் தகுதியை அடையச் செய்கின்ற அல்லது பரிபாலிக்கக்கூடியவனுக்கே கூறப்படுகின்றது. உண்மையில் மனிதன் பல கடவுள்களை உருவாக்கி வைத்துள்ளான். மேலும் தனது சூழ்ச்சிகள் மீது மட்டுமே அவனுக்கு நம்பிக்கை இருக்கின்றது. அதாவது அதுவே அவனது ரப்பாக இருக்கின்றதது. அவனுக்கு தனது அறிவின் மீது கர்வம் இருக்குமென்றால் அதுவே அவனது ரப்பாகும். மேலும் அவனுக்கு தனது அழகு மற்றும் செல்வத்தின் மீது பெருமிதம் இருக்குமென்றால் அதுவே அவனது கடவுளாகும்.

ஆக, இவ்வாறான ஆயிரக்கணக்கான வழிமுறைகள் அவனோடு இருக்கின்றன. எப்போது வரை இவை அனைத்தையும் விட்டு விட்டு அவற்றின் மீது அதிருப்தியடைந்து அநத் ஏக மற்றும் உண்மையான இறைவனுக்கு முன்னால் தலை வணங்க மாட்டானோ மேலும் ரப்பனா என்று உள்ளத்தை உலுக்கக்கூடிய குரலில் மூலமாக அவனது சந்நிதானத்தில் அவன் விழுவில்லையோ அப்போது வரை அவன் உண்மையான இறைவனை புரிந்து கொள்ளவில்லை.

எனவே எப்போது உளப்பூர்வமாக அவனது சந்நிதானத்தில் தனது பாவங்களை ஒப்புக் கொண்டவாறு அவன் தவ்பா செய்வானேயானால் மேலும் அவனிடம், ரப்பனா அதாவது உண்மையான இறைவன் நீயே ஆவாய். ஆனால் நாங்கள் எங்களது தவறின் காரணமாக வேறு இடங்களில் சுற்றித் திரிந்தோம். இப்போது நான் இந்த பொய்யான சிலைகளையும், பொய்யான கடவுள்களையும் விட்டு விட்டேன்.

மேலும் உண்மையான உள்ளத்துடன் உனது படைத்து பரிபாலிக்கும் பண்பை ஏற்றுக் கொள்கின்றேன். உன்னுடைய சந்நிதானத்தில் வருகின்றேன் என்று கூறாமல் ஒருபோதும் இறைவனை தனது ரப்பாக ஆக்குவது கடினமே ஆகும். எப்போது வரை மனிதனின் உள்ளத்திலிருந்து இதர கடவுள்களின் கண்ணியமும், மகிமையும், மதிப்பும் வெளியேறவில்லையோ அப்போது வரை உண்மையான இறைவனை அறிந்து கொள்ள இயலாது. சில மக்கள் பொய்யையே தமது கடவுளாக ஆக்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் பொய் கூறாமல் நமது வாழ்க்கை கழிவது கடிமாகும் என்று கருதுகின்றனர். சிலர் திருடுவதையும், வழிப்பறி கொள்ளையில் ஈடுபடுவதையும், பொய்யாக பேசுவதையும் தமது கடவுள்களாக ஆக்கியுள்ளனர். அவர்களுடைய கொள்கை என்னவென்றால், இந்த வழி அல்லாமல் நமது வாழ்வாதாரத்திற்கு வேறு வழியில்லை என்பதாகும்.

அன்னார் கூறினார்கள்: ஆக இப்படிப்பட்ட மக்கள் அவர்களுக்கு தங்களது சூழ்ச்சிகள் மீது நம்பிக்கை இருக்கின்றது. அவர்களுக்கு இறைவனிடம் துஆ செய்ய என்ன நேர்ந்து விட்டது? எவருடைய அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டு விட்டதோ அவருக்கு தான் துஆ செய்வதற்கான தேவை இருக்கின்றது. அவனுடைய கதவுகளைத் தவிர வேறு எந்த வழியும் இல்லாமல் இருக்கின்ற அந்த நபரது உள்ளத்திலிருந்து தான் துஆ எழுகின்றது.

ஆக ரப்பனா ஆதினா ஃபித்துன்யா – இறைவனை தனது ரப்பாக அறிந்தவர்களால் தான் இப்படிப்பட்ட துஆவை செய்ய இயலும். இது அவர்களது பணியாக இருக்கின்றது. மேலும் அவர்கள் தனது ரப்பின் முன்னிலையில் மற்ற அனைத்து கடவுள்களும் பொய்யானதும், ஒன்றுமற்றதாகும் என்ற நம்பிக்கையை கொண்டுள்ளனர்.

கூறினார்கள்: நெருப்பு என்பது கியாமத் அன்று இருக்கக்கூடிய நெருப்பு மட்டும் கிடையாது. மாறாக, உலகிலும் ஒரு மனிதர் நீண்ட ஆயுளை பெறுகின்றார். அவர், உலகத்தில் ஆயிரக்கணக்கான நெருப்புகள் இருப்பதை பார்த்து விடுகின்றார். பல்வேறு வகையான நெருப்புகள் உலகில் இருக்கின்றன என்பதை அனுபவசாலிகள் அறிந்திருக்கின்றனர். பல்வேறு வகையான தண்டனைகள், அச்சம், பசி, நோய்கள், தோல்விகள், இழிவு, ஆயிரக்கணக்கான கஷ்டங்கள், குழந்தைகள், மனைவி போன்ற துன்பங்கள், உறவினர்களோடுள்ள பிரச்சனைகள், ஆக இவை அனைத்தும் நெருப்பாகும்.

நம்பிக்கையாளர் துஆ செய்கின்றார். இந்த எல்லா விதமான நெருப்பிலிருந்தும் எங்களை நீ காப்பாற்றுவாயாக. நாங்கள் உன் பாதத்தை வலுவாக பிடித்துக் கொண்டோம். எனவே நீ மனிதனது வாழ்க்கையை பாழாக்குகின்ற, மனிதர்களுக்கு நெருப்பாக விளங்குகின்ற இந்த கஷ்டங்களிலிருந்து எங்களை காப்பாற்றுவாயாக.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 187–190, 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு முறை ஜமாஅத்திற்கு இதன் பக்கம் கவனமூட்டியவாறு, நமது ஜமாஅத்தும் இந்த துஆவை அதிகமாக ஓத வேண்டும் என்று கூறினார்கள். அந்த துஆ இதுவாகும்.

رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنۡيَا حَسَنَةً وَّفِي الۡاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

ஆகவே இதன் பக்கமும் நாம் கவனம் செலுத்த வேண்டும். இதன் மூலமாக அல்லாஹ் தனது கருணையில் நம்மை எடுத்துக் கொண்டு எல்லா விதமான உலக மற்றும் மறுமை நாளின் நெருப்பிலிருந்து நம்மை பாதுகாப்பாக வைப்பானாக. (2:202)

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 9, 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ள இந்த விஷயத்தின் சுருக்கம் இதுவாகும். அதாவது என் அடியார்களே! என்மீது அவநம்பிக்கை அடைந்து விடாதீர்கள். நான் கருணைகாட்டக்கூடிய, மன்னிக்கக்கூடிய மற்றும் பாவங்கள் மறைக்கக்கூடியவன் ஆவேன். மேலும் அதிகம் அதிகமாக உங்கள் மீது கருணை காட்டக்கூடியவன் ஆவேன். நான் எவ்வாறு உங்கள் மீது கருணை காட்டுகின்றேனோ அவ்வாறு எவரும் உங்கள் மீது கருணை காட்ட இயலாது. உங்களுடைய தந்தையை விட அதிகமாக என்னை நீங்கள் நேசியுங்கள். உண்மையில் நான் அன்பு செலுத்துபவர்களில் இவர்கள் எல்லாரையும் விட அதிகமாக அன்பு செலுத்துகின்றேன். நீங்கள் என் பக்கம் வருவீர்களாயின் நான் உங்களது அனைத்து பாவங்களையும் மன்னிப்பேன்.

நீங்கள் தவ்பா செய்தால் நான் உங்களது தவ்பாவை ஏற்றுக் கொள்வேன். நீங்கள் என் பக்கம் மெதுமெதுவாக வந்தாலும் நான் ஓடி வருவேன். எவர் என்னை தேடுவாரோ அவன் என்னை அடைவார். எவர் என் பக்கம் திரும்புவாரோ அவர் எனது கதவுகள் திறந்திருப்பதை பார்ப்பார். நான் தவ்பா செய்யக்கூடியவரது பாவத்தை மன்னிக்கின்றேன். அது மலையளவை விட அதிகமாக இருந்தாலும் சரியே. என்னுடைய கருணையானது உங்கள் மீது அதிகமாக இருக்கின்றது. மேலும் கோபம் குறைவாக உள்ளது. ஏனென்றால் நீங்கள் எனது படைப்பினமாவீர்கள். நானே உங்களை படைத்துள்ளேன். எனவே என் கருணை உங்களை சூழ்ந்துள்ளது.

(சஷ்மா மஃரூஃபத், ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 56)

அல்லாஹ் நம்மை அல்லாஹ்வின் பக்கம் கலப்பற்ற முறையில் செல்வதற்குரிய பாக்கியத்தை வழங்குவானாக. அவனுடைய இறையச்சத்தை அடையக்கூடியவர்களாக ஆக்குவானாக. மேலும் ஈமானிலும் நிச்சய உறுதியிலும் முன்னேற்றத்தை பெறக் கூடியவர்களாக ஆக்குவானாக. இதன் மூலம் நிரந்தரமாக அவனது கருணையிலிருந்து பங்கு பெறக் கூடியவர்களாக நாம் விளங்குவோமாக. ஒருபோதும் அவனது கருணையிலிருந்து விலகி இருப்பவர்களாக நாம் இருந்து விடக்கூடாது. மேலும் நமது தீய செயலின் காரணமாக அவனது தண்டனைக்கு ஆளாகாமல் இருப்போமாக. அல்லாஹ்வின் கருணையின் பார்வை எப்போதும் நம்மீது இருக்கட்டுமாக. ஆமீன்

*(7 வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

வந்து செல்வதுண்டு. ஹாஜி சாஹிப் அவர்கள் மூலமாகவே இவர்களுக்கு இஸ்லாத்தின் மீது அதிக கவனம் ஏற்பட்டது. ஒரு நீண்ட காலமாக கேள்வி பதில் இருவருக்குமிடையில் நடைபெற்று வந்தது.

பிறகு மெதுமெதுவாக இஸ்லாத்தின் உண்மைத்துவம் இவர்களுக்கு தெரிய வந்தது. இறுதியில் 1978 ஆம் ஆண்டு பைஅத் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைந்தார்கள்.

அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஹாஜி நஸீர் சாஹிபிடம், எனக்கு சிறு வயதிலிருந்து கிருத்தவ பாதிரியாக வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் நான் இப்போது இஸ்லாத்தை தழுவி விட்டேன். என்னால் இஸ்லாத்திற்கு சேவை செய்ய முடியுமா? என்று கேட்டார்கள்.

அதற்கு ஹாஜி சாஹிப் அவர்கள், நீங்கள் இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதற்காக உங்களது வாழ்க்கையை அர்ப்பணியுங்கள் என்று அவர்களிடம் கூறினார்கள்.

அப்போது முஹம்மது அலி காஹிர் சாஹிப் என்பவர் உகண்டாவின் அமீராக இருந்தார்கள். பாகிஸ்தான் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படிப்பை முடித்து விட்டு உகண்டா சென்றிருந்தார்கள். 1980 ல் மாலா கானா சாஹிப் அவர்களை ஐந்து குத்தாம்களோடு பாகிஸ்தான் அனுப்பி வைத்தார்கள்.

1980 ல் ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். 1988 ஆம் ஆண்டு படிப்பை நிறைவு செய்தார்கள். ஜாமஆவில் இவர்கள் படித்தது தொடர்பாக இவர்களைப் பற்றி அப்போது பிரின்சிபலாக இருந்த மீர் மஹ்மூது அஹ்மது நாஸிர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

அறிவு ரீதியாக மிகவும் பலகீனமானவர். ஆனால் ஒத்துழைப்பு வழங்குகின்ற மற்றும் கட்டுப்பட்டு நடக்கின்ற சிறந்த மாணவர் ஆவார். இறைவணக்கம் செய்யக் கூடியவர். பெரியவர்களை சந்திப்பது மற்றும் அவர்களிடம் துஆவிற்காக கூறுவது இவர்களுடைய பழக்கமாக இருந்தது. அன்னார் பெரும் முயற்சி செய்து ஜாமிஆ அஹ்மதிய்யா படிப்பை நிறைவு செய்தார்கள்.

1984 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு பாகிஸ்தானிலிருந்து ஹிஜ்ரத் செய்ய வேண்டியது வந்தது. அப்போது இக்கட்டான நிலைமைகளில் மகிழ்ச்சியுடனும், தைரியத்துடனும் டியூட்டி கொடுத்தவர்களில் இவரும் ஒருவர் ஆவார்கள்.

தற்போதைய பிரின்சிபல் முபஷ்ஷிர் அஹ்மது அயாஸ் சாஹிப் எழுதுகின்றார்கள்: நாங்கள் ஜாமிஆவில் ஒன்றாக இருந்தோம். நல்ல இயல்பை உடையவர். அமைதியான இயல்பை கொண்டவர். இவருக்கு இறை வணக்கத்தில் சிறப்பான ஆர்வம் இருந்தது. கட்டுப்பட்டு நடப்பது இவர்களுடைய சிறப்பான பண்பாகும்.

கூறுகின்றார்கள். நான் நகீபாகவும், ஸயீமாகவும் இருந்ததால் இவர்களோடு பல முறை தொடர்வு வைக்க வேண்டியதிருந்தது. எளிமையான நபராவார். கால்பந்து விளையாட்டில் ஆர்வமுடையவர். டீமில் இவர்களை குறிப்பாக சேர்த்து வந்தனர். ஜாமிஆவின் படிப்பை நிறைவு செய்த பிறகு ஒரு முபல்லிகாக 1988 ல் உகண்டாவிற்கு பணியமர்த்தம் செய்யப்பட்டார்கள். அங்கு அவர்கள் பல்வேறு ஜமாஅத்துகளில் முபல்லிக்காக பணியாற்றியுள்ளார்கள்.

2007 ஆம் ஆண்டு இரண்டு உகண்டா மாணவர்களுடன் இவர்கள் பாகிஸ்தானிற்கும் சென்றார்கள். அங்கு அவர்களுக்கு உகண்டா மொழியில் திருக்குர்ஆனை சரிபார்க்கும் நல்வாய்ப்பு கிடைத்தது. மூன்று மாதங்களுக்குள் இவர்கள் இப்பணியை செய்து முடித்தனர்.

ஜாமிஆவில் அறிவு ரீதியாக பலகீனமானவர்களாக இருந்தாலும் பிறகு அறிவு ரீதியாக மிகவும் முன்னேறிச் சென்று விட்டார்கள். அறிவை அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். மர்ஹூம் அவர்களுக்கு தப்லீக்கின் பக்கம் அதிக ஆர்வம் இருந்தது. இவர்கள து தப்லீக்கின் விளைவாக அதிகமான மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். சைக்கிளிலேயே தொலை தூரம் வரை தப்லீக்கிற்காக செல்வார்கள்.

ஒரு முறை அவர்கள் தப்லீக்கிற்காக சென்ற போது அவர்களது மனைவி வஃபாத்தாகி விட்டார்கள். அவர்களை தொடர்பு கொள்வதற்கு எந்த வழியும் இல்லாமல் இருந்தது. தப்லீக் பயணத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய போது தான் அவர்களது மனைவி மரணமடைந்த விஷயமும், நல்லடக்கம் செய்யப்பட்டதும் அவர்களுக்கு தெரிய வந்தது.

தமது முழு வாழ்நாளையும் எளிமையான முறையில் மார்க்கத் தொண்டாற்றியவாறு கழித்தார்கள். மிகவும் கருணைகாட்டக்கூடிய உள்ளம் கொண்டவராகவும், அனுதாபம் மற்றும் பரிவுடன் நடந்து கொள்ளக்கூடிய மனிதர் ஆவார். ஏழைகளை மிகவும் கவனத்தில் கொண்டிருந்தார்கள்.

கிலாஃபத்தின் மீது அளப்பற்ற பற்று கொண்டிருந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு கட்டளைகளையும் கேட்பது கட்டாயமாகும் என்று எண்ணி வந்தார்கள்.

ஆப்ரிக்க முபல்லிக்கள் குறிப்பாக வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களிடம் இவ்விஷயத்தை நான் பார்த்துள்ளேன். ஆனால் கிலாஃபத்துடன் இவர்களுக்கு குறிப்பான ஒரு தொடர்பு இருந்தது.

அமீர் சாஹிப் உகண்டா மதிப்பிற்குரிய முஹம்மது அலி காஹர் சாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் முபல்லிக்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரியாவார். மிகவும் சிறந்த உள்ளத்தை கெண்டவராகவும், அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கின்ற மற்றும் மார்க்க சேவைகளை செய்யக்கூடிய மனிதராக இருந்தார்கள். பலவிதமான கஷ்டங்கள் இருந்திருந்தாலும் எவ்வித குறையும் அவர்கள் கூறியதில்லை.

மாறாக, எல்லா விதத்தில் அவர்கள் மார்க்கத் தொண்டையே செய்து வந்தார்கள். முதல் மனைவி மரணத்திற்குப் பிறகு இரண்டாவது திருமணம் செய்தார்கள். சில காலத்திற்குப் பிறகு மூன்றாவது திருமணம் செய்தார்கள்.

அவர்களில் ஒரு மனைவி எழுதுகின்றார்கள். நான் அவர்களை முழு வாழ்நாளிலும் மிகவும் அதிகமாக அன்பு செலுத்தக்கூடியவராகவும், மென்மை உள்ளம் படைத்தவராகவும், ஒவ்வொரு நிலையிலும் அமைதியான மற்றும் இறைவனுக்கு நன்றி செலுத்தக்கூடிய மனிதராகவே கண்டேன்.

அவர்களது மகள் இவ்வாறு எழுதுகின்றார்: எங்களது தந்தை பரிவு காட்டக்கூடிய, தைரியமிக்க மனிதராவார். எங்களது தேவைகளை கருத்தில் கொள்பவர். மேலும் மார்க்கத்தின்படி அமல் செய்வதற்கு போதனை செய்து வந்தார்கள்.

மர்ஹூம் தமக்கு பின்னால் இரண்டு மனைவியையும் ஒன்பது குழந்தைகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அவர்கள் மீது கருணை புரிவானாக.

அவர்களுக்கு மக்ஃபிரத்தை வழங்குவானாக. அவர்களுடைய சந்ததிகளுக்கும் எப்போதும் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் ஒன்றிணைந்திருப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.


### *நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

EDITOR
M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 12 July 2018 Issue No. 28

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்ல. எவர் தனது பெற்றோருக்கு மதிப்பு அளிக்காமலும் திருக்குர்ஆனின் போதனைக்கு மாற்றமில்லாத அவர்களது அவர்களது விஷயங்களை ஒப்புக் கொள்ளாமலும் அவர்களுக்கு சேவை செய்வதில் கவனமில்லாமலும் இருக்கின்றாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். எவர் தனது மனைவியோடும் அவரின் உறவினர்களோடும் மென்மையுடனும் அனுதாபத்துடனும் நடந்து கொள்ள மாட்டாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். எவர் தனது அண்டை வீட்டுக்காரர்களுக்குச் சிறு சிறு நன்மைகளையும் புரிவதில்லையோ அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர்.

எவர் தனக்கு தீங்கு விளைவித்தவரின் குற்றத்தை மன்னிக்காமல் அவர் மீது பகைமை பாராட்டுவாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். தன் மனைவியை வஞ்சிக்கின்ற கணவனும், தன் கணவனை வஞ்சிக்கின்ற மனைவியும் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். எவர் என்னிடம் பைஅத் என்னும் உடன்படிக்கையின் போது செய்த வாக்குறுதிகளை ஏதாவதொரு வகையில் மீறுவாரோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். எவர் என்னை உண்மையாக வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தியாகவும் நம்பவில்லையோ அவர் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர். எவர் அனைத்து நற்காரியங்களிலும் என்னைப் பின்பற்ற தயாராக இல்லையோ அவர் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் அல்லர்.

எவர் பகைவர்களின் கூட்டத்தில் போய் இருந்து கொண்டு அவர்களது கூற்றுகளுக்கு ஆமாம் போடுவாரோ அவரும் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவராக மாட்டார். விபசாரம் புரியும் ஒவ்வொருவரும், திருடரும், சூதாட்டக்காரரும், நம்பிக்கை துரோகியும், லஞ்சம் வாங்குகிறவரும், அக்கிரமக்காரரும், அநியாயக்காரரும், புறம் பேசுகின்றவரும், பொய்யரும், ஏமாற்றுக்காரரும், இவர்களோடு கூட்டுச் சேர்ந்தவரும், தனது சகோதர சகோதரிகள் மீது பொய்க் குற்றம் சுமத்தக் கூடியவரும், தனது தீய செயல்களிலிருந்து பாவமன்னிப்பு கோராதவரும், கெட்டக் கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளாதவரும் ஆகிய இத்தகையவர்கள் அனைவரும் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதத்தக்கவர்கள் அல்லர்.

இவை அனைத்தும் கொடிய விஷமாகும். இவைகளை உண்ட பின் அவற்றிலிருந்து எவ்விதத்திலும் நீங்கள் தப்பிப் பிழைக்க மாட்டீர்கள். இருளும் ஒளியும் ஒரே இடத்தில் ஒன்று சேரக்கூடியவை அல்ல. இறைவனோடு தொடர்புள்ள தூய்மையான இதயம் உள்ளவர்களோடு கிடைக்கும் தெள்வீக அருட்கொடைகளை இறைவனோடு நல்ல தொடர்பு இல்லாத தீய குணத்தைக் கொண்டவர்கள் ஒருபோதும் பெற முடியாது. தங்களது உள்ளங்களை சுத்தம் செய்வோரும் தங்களது உள்ளங்களை ஒவ்வொரு அசுத்தத்திலிருந்தும் தூய்மைப்படுத்துவோரும் தன் இறைவனுடன் நன்றி உணர்வோடு இருப்பதாக உறுதிமொழி கூறுபவரும் எத்தனை பெரும் பாக்கியசாலிகளாயிருக்கிறார்கள்!

ஏனெனில் அவர்கள் ஒருபோதும் வீணாக்கப்படமாட்டார்கள். இறைவன் அவர்களை இழிவுபடுத்தவான் என்பது ஒருபோதும் நடக்காத காரியமாகும். ஏனெனில் அவர்கள் இறைவனுக்காகவே ஆகிவிட்டவர்களாவர். இறைவனும் அவர்களுக்காகவே ஆகிவிட்டான். அவர்கள் ஒவ்வொரு ஆபத்தான சமயத்திலும் காப்பாற்றப்படுவார்கள். ஆகவே அவர்களை எதிர்க்கும் பகைவன் அறிவீனனாவான். ஏனெனில் அவர்கள் இறைவனது மடியில் அமர்ந்துள்ளனர். மேலும் இறைவன் அவர்களுக்க துணைபுரிந்தும் வருகின்றான். இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர் யார்? இத்தகையவர்களே அவன் மீது நம்பிக்கை கொண்டவர்களாவர். இவ்வாறே ஒரு பெரிய பாவியைப் பற்றியும் விஞ்சகனைப் பற்றியும் துஷ்டனைப் பற்றியும் கவலை கொள்பவனும் அறிவீனனேயாவான். ஏனெனில் இதனால் அவனே அழிந்து விடுவான்.

இறைவன் வானங்களையும், பூமியையும் உண்டு பண்ணிய காலத்திலிருந்து அவன் தன் நல்லடியார்களை அழிந்து நாசப்படுத்தி இருக்கிறானா என்ன? இல்லை. மாறாக, அவன் பெரும் மகத்தான பணிகளை தனது அடியார்களின் பொருட்டாக செய்றது வந்திருக்கிறான். அவ்விறைவன் இப்போதும் அவ்வாறே செய்து வருகிறான். அவ்விறைவன் மிகவும் நன்றியுடையவனாவான். நன்றியுடையவர்களுக்காக அவனது அற்புதமான செயல்கள் வெளியாகின்றன. அவர்களை விழுங்கி விட உலகம் விரும்புகிறது. அவர்களைக் கண்டு ஒவ்வொரு பகையாளியும் தன் பல்லைக் கடிக்கிறான். ஆனால் அவர்களின் தோழனாகிய அவ்விறைவனோ அவர்களின் ஒவ்வொரு அழிவினின்றும் காப்பாற்றுகிறான்.

மேலும் ஒவ்வொரு களத்திலும் அவர்களுக்கு வெற்றியை அளிக்கிறான். இத்தகைய இறைவனோடுள்ள உறவை விடாதவர் எத்தகைய நற்பேறு பெற்றவராவார்! நாம் அவன் மீது நம்பிக்கை கொண்டோம். நாம் அவனை அறிந்து கொண்டோம். என்மீது அவன் வெளிப்பாடு இறக்கியவனே முழு உலகிற்கும் இறைவனாவான். அவன் எனக்காக உறுதியான அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டினான். அவன் என்னை இக்காலத்திற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியுள்ளான். அவனைத்தவிர வானங்களிலும் பூமியிலும் வேறு இறைவன் இல்லை. எவர் அதன் மீது நம்பிக்கை கொள்ள மாட்டாரோ அவர் பாக்கியம் கெட்டவரும் அவமானத்திற்குரியவருமாவார்.

நாம் சூரியனை போன்று, நமது இறைவனின் ஒளிமிக்க வஹியைப் பெற்றோம். அவனே முழு உலகிற்கும் இறைவன் என்றும் அவனைத் தவிர வேறு யாருமில்லை என்றும் நன்கு அறிந்து கொண்டோம். நாம் அடைந்த இறைவன் எத்தகைய வல்லமைஸயடையவனும், தான் நிலைத்திருப்பது மட்டுமின்றி மற்ற அனைத்தையும் நிலைத்திருக்கச் செய்யக் கூடியவனுமாய் இருக்கின்றான்! நாம் கண்ட இறைவன் வலுவான ஆற்றல்களை உடையவனாவான். அவன் முன் எந்த விஷயமும் ஆக முடியததன்று. என்றாலும் அவன் தன் வேதத்திற்கும் வார்த்தைப்பாட்டிற்கும் மாறாக எதுவும் செய்வதில்லை. இதுவே உண்மையாகும்.

நீங்கள் துஆ செய்யும் போது தங்களது எண்ணங்களைக் கொண்ட ஓர் இயற்கை சட்டத்தை உருவாக்கிக் கொண்ட அந்த அறிவீனர்களான இயற்கைவாதிகளைப் போல் செய்யாதீர்கள். அவர்களால் உருவாக்கப்பட்ட அவ்வியற்கை சட்டங்கள் மீது இறைவனது வேதத்தின் முத்திரை பதிக்கப்படவில்லை. ஏனெனில் அவை மறுக்கப்பட்டவையாக இருக்கின்றன. அவர்களது பிரார்த்தனைகள் ஒருபோதும் அங்கீகரிக்கப்படமாட்டாது. அவர்களோ பார்வை இழந்த குருடர்களாகவும் உயிரில்லாத பிணங்களாகவும் இருக்கின்றனர். இறைவன் முன்பு தங்களால் வகுக்கப்பட்ட சட்ட திட்டங்களை சமர்ப்பிக்கின்றார்கள். அவனது எல்லையற்ற சக்திகளுக்கு ஒரு வரம்பை நிர்ணயிப்பதோடு அவனைப் பலவீனமுள்ளவனாகவும் கருதுகிறார்கள். ஆகவே அவர்களது நிலைமைக்கேற்பவே அவர்களோடு நடந்து கொள்ளப்படும்.

ஆனாலும் நீர் துஆவென்னும் பிரார்த்தனைக்காக நிற்கும் போது உமது இறைவன் எல்லாவற்றின் மீதும் வல்லமையுடையவன் என்பதனை உறுதியாக நம்ப வேண்டியது உமது கடமையாகும். அப்போது தான் உமது பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும். மேலும் நாம் கண்ட இறைவனது வல்லமைகளான அற்புதங்கள் நீரும் காண்பீர். இவை அனைத்தும் நமது கண்களால் கண்ட சாட்சிகளே தவிர வெறும் கட்டுக்கதையோ கற்பனையோ அல்ல.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 18–21)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad